## பாடம் 3 சுற்றுலா செல்வோம்

### வாசித்து எழுதுக.




### நடவடிக்கை 1

**குறிப்புகளைத் துணையாகக் கொண்டு 100 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை ஒன்றனை எழுதுக.**

### நடவடிக்கை 2

**‘பசுமை காக்கும் முறைகள்’ எனும் தலைப்பில் ஒரு கருத்து விளக்கக் கட்டுரை எழுதுக.**

3.6.12 - 100 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு:
- கருத்துகளை வாசித்து அறியச் செய்தல்.
- கருத்து விளக்கக் கட்டுரை ஒன்றனை எழுதப் பணித்தல்.


வி.வ.கூ: சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் | உ.சி.தி: பகுத்தாய்தல் | 21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## முதுரையையும் பொருளையும் அறிக.

அமைதியும் நிதானமும் கொண்ட பீர்பால் அரசரின் ஆலோசகராகப் பணியாற்றினார். இவருடைய குணம் அரசரின் மனத்தைக் கவர்ந்தது. மற்ற அமைச்சர்கள் பீர்பாலின் மீது பொறாமை கொண்டனர். பீர்பாலிடம் அரசர் கோபம் கொள்ள வேண்டும் என எண்ணினர். எனவே, அரசர் கேட்க நினைத்த கேள்விகளுக்குப் பீர்பாலைப் பதில் அளிக்கச் செய்தனர்.

அரசர் : உலகிலேயே சிறந்த ஆயுதம் எது?
பீர்பால் : அறிவு
அரசர் : வெல்ல முடியாத எதிரி யார்?
பீர்பால் : மரணம்
அரசர் : என்றும் அழியாதது?
பீர்பால் : புகழ்
அரசர் : மகிழ்ச்சியோடிருக்க வழி?
பீர்பால் : போதுமென்ற மனம்
அரசர் : மணலையும் சர்க்கரையையும் எப்படிப் பிரிப்பது?
பீர்பால் : தரையில் தூவினால் சர்க்கரையை மட்டும் எறும்புகள் எடுத்துக் கொண்டு போய்விடும்.
அரசர் : எப்பொழுதும் சந்திக்க முடியாத அண்டை வீட்டார்?
பீர்பால் : கண்கள்
அரசர் : காற்றைவிட வேகமானது?
பீர்பால் : மனம்



பீர்பால் கூறிய பதில்களைக் கேட்டு அரசர் மனம் மகிழ்ந்து பாராட்டினார். பீர்பாலுக்குத் தீமை நடக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்த அமைச்சர்கள் அனைவரும் வெட்கித் தலைகுனிந்தனர். இவர்களின் உண்மை நிலையை அறிந்த அரண்மனைக் கவிஞர் ஒருவர், “அடக்கமாக இருப்பவர்கள் அறிவு அற்றவர்கள் என்று எண்ணக்கூடாது. அவர்களை நாம்

அவமானப்படுத்தும் வகையில் தீமை செய்தால் நாம்தான் தலைகுனிய வேண்டியிருக்கும்," என்று பணிவாகக் கூறினார். தொடர்ந்து, தீய எண்ணம் கொண்ட அமைச்சர்களுக்குப் பொருந்தும் வகையில் மூதுரை வரிகளை இவ்வாறு பாடினார்.

## மூதுரையும் பொருளும்

- **அடக்க முடையா ரறிவிலரென் றெண்ணிக்**
  **கடக்கக் கருதவும் வேண்டா - மடைத்தலையில்**
  **ஓடுமீ னோட உறுமீன் வருமளவும்**
  **வாடி யிருக்குமாங் கொக்கு.**

  - கொக்கானது வாய்க்காலில் ஓடுகிற சிறுமீன்கள் ஓடிக்கொண்டிருக்க, அவற்றைப் பிடிக்க எண்ணாமல் தன் இரைக்கு ஏற்ற பெரிய மீன்கள் வரும்வரை அடங்கிக் காத்திருக்கும். அதைப் போன்று அடக்கமாயிருப்பவரை அவரது வலிமையை அறியாது அறிவற்றவரென்று கருதி, அவரை வெல்வதற்கு முயலக்கூடாது. அதனால், துன்பமே வந்து சேரும்.

### நடவடிக்கை 1

**மூதுரையையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறுக.**

### நடவடிக்கை 2

**விடுபட்ட மூதுரை வரிகளை எழுதி நிரல்படுத்திடுக. சொல்வதெழுதுதல் பயிற்சியாக எழுதச் செய்திடுக.**

ஓடுமீ னோட ______________________

அடக்க முடையா ______________________

வாடி யிருக்குமாங் ______________________

______________________ - மடைத்தலையில்

### தகவல் கூடம்

- அசகாய சூரன் என்ற தொடரை அ + சகாயம் + சூரன் எனப் பிரிக்கலாம். சகாயம் என்றால் உதவி. பிறர் உதவியின்றித் தானே தனித்து நின்று வெல்பவன் எனப் பொருள்படும்.

4.13.2 - ஐந்தாம் ஆண்டுக்கான மூதுரையையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு:

- கதையை வாசிக்கப் பணித்தல்.
- மூதுரையையும் அதன் பொருளையும் அறிந்து கூறி எழுதப் பணித்தல்.

வி.வ.கூ: மொழி | உ.சி.தி: ஆக்கச் சிந்தனை | 21ஆம் நூ. தி: தகவல் நிறைந்தவர்

# பாடம் 5 இலக்கணம்

## வலிமிகா இடங்கள் அறிக.

• சொற்றொடர்களில், வருமொழி ‘க், ச், த், ப்’ ஆகிய வல்லெழுத்துகளில் தொடங்கினாலும் நிலைமொழி ஈற்றில் சில இடங்களில் வலிமிகாது.

அவை, இவை, எவை என்பனவற்றுக்குப்பின் வலிமிகாது.

எடுத்துக்காட்டு:

அவை + படகுகள் = அவை படகுகள்
இவை + சிலைகள் = இவை சிலைகள்
எவை + போயின = எவை போயின?

ஆசிரியர் தயாரிக்கச் சொன்ன வலிமிகா சொற்களைப் பட்டியலிட்டுள்ளேன், பொற்றாமரை. இதோ பார்!

அவை + சாவிகள் = அவை சாவிகள்
இவை + தூண்கள் = இவை தூண்கள்
எவை + குயில்கள் = எவை குயில்கள்?

மிகச் சிறப்பு வான்மதி. இதோ! நான் தயாரித்த பட்டியலையும் பார்!

அவை + புறாக்கள் = அவை புறாக்கள்
இவை + படகுகள் = இவை படகுகள்
எவை + பாத்திகள் = எவை பாத்திகள்?



## நடவடிக்கை 1


**சேர்த்தெழுதுக.**

1. அவை + பேருந்துகள் = ________
2. இவை + சொற்கள் = ________
3. எவை + கூடுகள் = ________
4. அவை + படிகள் = ________
5. இவை + தூண்கள் = ________
6. எவை + தோணிகள் = ________
7. அவை + குளவிகள் = ________
8. இவை + பசுக்கள் = ________
9. எவை + புற்றுகள் = ________
10. அவை + கொடிகள் = ________
11. இவை + கோழிகள் = ________
12. எவை + சுவர்கள் = ________

## நடவடிக்கை 2


**சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் எழுதி வாசித்திடுக.**

1. (இவை சிறப்பான) சிறுகதைகள் என்று ஆசிரியர் கூறினார்.




2. (எவை செய்யுள்கள்) என்று அக்காள் அண்ணனிடம் கேட்டாள்.

3. (அவை குதிரைகள்) என அப்பா தம்பியிடம் காட்டினார்.



4. (இவை கூர்மையான) ஆயுதங்கள் என அம்முதியவர் கூறினார்.

5. (அவை சிறப்பு) வாய்ந்த போர்க்கருவிகள் என்பதால் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டன.



6. (எவை கற்பனைக் கட்டுரைகள்) என மாணவர்கள் கேட்டுத் தெளிந்தனர்.

5.9.4 - அவை, இவை, எவை என்பனவற்றுக்குப்பின் வலிமிகா என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு:

- வலிமிகா இடங்களை வாசித்து அறியச் செய்தல்.
- பயிற்சிகளைப் பிழையறச் செய்யப் பணித்தல்.

வி.வ.கூ: மொழி | உ.சி.தி: பயன்படுத்துதல் | 21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்

# தொகுதி 8 தகவல் தொடர்புத் தொழில்நுட்பம்

## பாடம் 1 தகவல் ஊடகங்கள்

### கலந்துரையாடுக.




- தகவல் தரும் ஊடகங்கள் - செய்தித்தாள், தொலைக்காட்சி, வானொலி
- தகவல் தொடர்பு ஊடகங்கள் - கணினி, திறன்பேசி, தொலைபேசி

### நடவடிக்கை 1

**தலைப்பையொட்டிய கருத்துகளைத் தொகுத்துக் குழு முறையில் உரையாடுக.**

1.10.3 - தலைப்பையொட்டிய கருத்துகளைத் தொகுத்துக் கூறுவர்.

ஆசிரியர் குறிப்பு:

- தலைப்பையொட்டிய கருத்துகளை வாசித்து அறியச் செய்தல்.
- கருத்துகளைத் தொகுத்துக் கூறப் பணித்தல்.

வி.வ.கூ: தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் உ.சி.தி: உருவாக்குதல் 21ஆம் நூ. தி: தொடர்புகொள்ளும் திறன்

## பாடம் 2 வானொலி

### வாசித்து அறிக.



மனிதர்களின் அன்றாட வாழ்வில் முக்கியமான அங்கமாக விளங்குவது வானொலி. இக்கருவியானது மின் காந்த அலைகளின் வழி தொடர்பு கொள்ளும் கம்பியில்லாத் தொலைத்தொடர்பு ஊடகமாகும்.

மின்காந்த அலைகளின்வழி பாடல்கள், அறிவிப்புகள், கதைகள், உரையாடல்கள் போன்ற ஒலியலைகளை மக்கள் வானொலிப் பெட்டியின்மூலம் செவிமடுக்கிறார்கள். இந்த ஒலிபரப்புத் தொழில்நுட்பப் பெட்டியை வானொலி என்கிறோம்.

ஆரம்பத்தில் கப்பல்கள், நிலங்களுக்கு இடையில் மோர்ஸ் குறியீட்டைப் பயன்படுத்தித் தந்திக் குறிப்புகள் அனுப்பப்பட்டன. நவீனத் தொடர்புச் சாதனங்கள் பல அதிகரித்துவிட்ட போதிலும் வானொலி ஆற்றும் பங்கு சிறிதும் குறையவில்லை. உலகம் முழுவதிலும் இலட்சக்கணக்கான வானொலி நிலையங்கள் உள்ளன. விரைந்து தகவல்களை அளிக்கும் சாதனம் வானொலி என்றால் அது மிகையாகாது.

வானொலியினால் மக்கள் பல நன்மைகளை அடைகின்றனர். சிறுவர் முதல் பெரியவர் வரை தாங்கள் விரும்பிய பாடல்களை வானொலியில் கேட்டு மகிழ்கின்றனர். மேலும், மாணவர்களுக்கான நாடகங்கள், கதை, படைப்புகள், தேர்வு வழிகாட்டிக் கருத்தரங்குகள் போன்றவை பெரிதும் பயனுள்ள நிகழ்ச்சிகளாகவே அமைகின்றன.

பொது மக்களுக்குத் தேவையான அறிவிப்புகள், கலந்துரையாடல்கள், சமய விளக்க உரைகள், உலகச் செய்திகள் என மக்களைப் பெரிதும் கவர்ந்து இழுக்கும் சாதனமாக வானொலி திகழ்கின்றது. பல தன்முனைப்பு உரைகள், பாடல்கள் மக்களின் மனத்தை மகிழ்விப்பது மட்டுமன்றி அவர்களை நல்வழிப்படுத்துகின்றன. பசுமை இயக்கம், பூமியைக் காப்போம்,

நெகிழியைத் தவிர்ப்போம் போன்ற விழிப்புணர்வு கருத்தரங்குகள் மக்கள் நற்சிந்தனையுடன் செயல்பட வழிவகுக்கின்றன எனலாம்.

கற்றலின் கேட்டலே நன்று எனச் சான்றோர்கள் கூறுவதுண்டு. எனவே, வானொலி எனும் அற்புத ஊடகத்தின் மூலம் எழுத்தறிவு இல்லாதவர்களும் பயன்பெறுகின்றனர். மிக எளிமையான முறையிலும் மக்கள் பல வழிகாட்டல்களைப் பெறுகின்றனர்.

எனவே, வானொலி நிகழ்ச்சிகளின் மூலம் நாம் பல நற்பலன்கள் பெற்று நன்மையடைய வேண்டும்.

**தகவல் கூடம்**

காற்றின் வகை

- மென்காற்று
- இளம் தென்றல் காற்று
- தென்றல் காற்று
- புழுதிக் காற்று
- ஆடிக் காற்று
- கடுங்காற்று
- புயல் காற்று
- சூரைக் காற்று

## நடவடிக்கை 1

**கருத்துணர் கேள்விகளுக்கு விடையளித்திடுக.**

1. வானொலி எனப் பெயர் பெற்றது எவ்வாறு?
2. சிறுவர்களுக்கும் மாணவர்களுக்கும் வானொலி நிகழ்ச்சிகள் அளிக்கும் பயன்கள் யாவை?
3. பூமியைப் பாதுகாப்பது எனும் சிந்தனையை மக்களிடையே உருவாக்க எவ்வாறான நிகழ்ச்சிகள் பொருந்தும்?
4. வானொலியினால் ஏற்படும் நன்மை தீமைகளை வரிப்படத்தின் மூலம் எழுதிக் காட்டுக.

வானொலி, தொலைக்காட்சித் தகவல் ஊடகங்களுக்குமிடையே உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை வரிப்படத்தில் காட்டிடுக.

2.6.9 - தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

ஆசிரியர் குறிப்பு:

- உரைநடைப் பகுதியை வாசிக்கப் பணித்தல்.
- கருத்துணர் கேள்விகளுக்குச் சரியான பதிலை அளித்தல்.

வி.வ.கூ: அறிவியலும் தொழில்நுட்பமும் உ.சி.தி: பகுத்தாய்தல் 21ஆம் நூ. தி: தொடர்புகொள்ளும் திறன்

# பாடம் 3 செய்தித்தாளின் பங்கு

## வாசித்து எழுதுக.




## நடவடிக்கை I

**கருத்துகளைத் தொகுத்துப் பத்தியில் எழுதிடுக.**

3.5.6 - கருத்துகளைத் தொகுத்துப் பத்தியில் எழுதுவர்.


ஆசிரியர் குறிப்பு:

- கருத்துகளைப் பிழையற வாசிக்கப் பணித்தல்.
- கருத்துகளைத் தொகுத்துப் பத்தியில் எழுதச் செய்தல்.

வி.வ.கூ: தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் உ.சி.தி: ஆக்கச் சிந்தனை 21ஆம் நூ. தி: சிந்தனையாளர்

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## பழமொழிகளையும் பொருளையும் அறிக.




### பழமொழியும் பொருளும்

- **வெள்ளம் வருமுன் அணை போடு.**
  - வாழ்க்கையில் எச்சரிக்கையுடன் நடவடிக்கைகளை மேற்கொண்டால் எதிர்வரும் துன்பங்களையோ இடர்களையோ தவிர்க்கலாம்.
- **ஆழம் அறியாமல் காலை விடாதே.**
  - நாம் ஈடுபடும் செயலின் பின்விளைவுகளை நன்கு ஆராய்ந்த பிறகே அச்செயலில் ஈடுபட வேண்டும்.
- **ஆற்றிலே ஒரு கால் சேற்றிலே ஒரு கால்.**
  - ஒரே சமயத்தில் இரு வெவ்வேறு செயல்களில் ஈடுபட்டால் எக்காரியத்தையும் செவ்வனே செய்து முடிக்க முடியாது.

## நடவடிக்கை 1

**உரையாடலில் உள்ள பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து கூறுக.**

## நடவடிக்கை 2

**சூழலுக்கு ஏற்ற பழமொழியைக் கூறுக.**

1. மாவளன் இடைநிலைப் பள்ளியில் படித்துக் கொண்டே பேரங்காடி ஒன்றில் பகுதி நேர வேலை செய்தான். இதனால், படிப்பில் சரியான கவனம் செலுத்த முடியவில்லை. மேலும், வேலையிலும் சோர்ந்து போனான்.

2. தொழிற்சாலையில் வேலை செய்யும் திரு. குணாளன் தம் இரு பிள்ளைகளுக்காகப் பணத்தைச் சேமித்து வந்தார். பிள்ளைகளின் எதிர்காலக் கல்வி சிறப்புற அமைய வேண்டும் என்ற எண்ணத்திலும் பல இன்னல்களைத் தவிர்க்கவும் தம்மைத் தயார்படுத்திக் கொண்டார்.

3. நண்பர்களின் ஆசை வார்த்தைகளை நம்பி, திலகன் தன் பெற்றோர் விட்டுச் சென்ற சொத்துகளை எல்லாம் விற்றுவிட்டான். திடீர் பணக்காரர் ஆகும் திட்டத்தில் முழு மூச்சாய் இறங்கினான். இறுதியில், அனைத்தையும் இழந்து ஏமாந்து நின்றான்.

4. "உன் நண்பர்களின் பேச்சைக் கேட்டு எந்தக் காரியத்திலும் ஈடுபட்டு விடாதே! எதையும் நன்கு ஆராய்ந்த பின்னரே முடிவெடுக்க வேண்டும்," என்று வெளிநாடு செல்லும் தம் மகனுக்குத் திரு. மருதன் அறிவுரை கூறினார்.

5. பள்ளித் தேர்வுகளுக்கு முன்பாகவே மாணவர்கள் எல்லாப் பாடங்களையும் மீள்பார்வை செய்து தங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டால் தோல்வி என்பது அவர்களை நிச்சயம் நெருங்காது.

6. "இசையைக் கற்றுக் கொள்ளப் போகிறாயா? தையற்கலையைக் கற்கப் போகிறாயா, அகிலா? இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துத் திறம்படச் செய்யலாமே," என்றார் அப்பா.



4.7.5 - ஐந்தாம் ஆண்டுக்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.


ஆசிரியர் குறிப்பு:

- உரையாடலைப் பிழையற வாசிக்கப் பணித்தல்.
- பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து மனனம் செய்து கூறச் செய்தல்.

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை | உ.சி.தி: பயன்படுத்துதல் | 21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்

## பாடம் 5 இலக்கணம்

### இடைச்சொற்களை அறிக.





### நடவடிக்கை 1

**உரையாடலை வாசித்து இடைச்சொற்களை அறிக.**


## நடவடிக்கை 2

**சரியான இடைச்சொற்களை எழுதுக.**

1. எழிலரசி செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தவள். அனைவரிடமும் அன்பாகப் பழகுவாள்.
2. மாணவர்கள் விடாமுயற்சியுடன் விளையாடினர். முதல் இடத்தைப் பெறுவதில் தோல்வியுற்றனர்.
3. கவியழகன் தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவன். பிற மொழிகளைக் கற்றுக்கொள்ள மிகவும் ஆர்வம் காட்டினான்.
4. ஆசிரியர் போதித்த பாடத்தை வகுப்பு மாணவர்கள் கருத்தூன்றிச் செவிமடுத்தனர். சில சொற்களுக்குப் பொருள் தெரியாமல் விழித்தனர்.







## நடவடிக்கை 3

**சரியான இடைச்சொற்களை எழுதிப் பத்தியை வாசித்திடுக.**

அன்புநேயன் புதிய மிதிவண்டி ஒன்றனை வாங்க எண்ணம் கொண்டான். ______ அவன் சேமித்த பணம் போதுமானதாக இல்லை. ______ தன் எண்ணத்தைக் கைவிடவில்லை. தன் பெற்றோர் கொடுக்கும் பணத்தைச் சிறுகச் சிறுகச் சேமிக்கலானான். ______ சில நேரங்களில் தனது சேமிப்பை அதிகரிக்கப் பகுதி நேர வேலை செய்ய நினைத்தான். ______ தான் கல்வியில் பின்தங்கி விடுவோமா எனப் பயந்தான். ______ மனம் தளராது தன் இலக்கை அடைய இன்னும் முயல்கிறான்.






5.3.22 - ஆயினும், ஆனாலும், இருப்பினும், இருந்தாலும் ஆகிய இடைச்சொற்களை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு:


- இடைச்சொற்களின் பயன்பாட்டினை அறியச் செய்தல்.
- பயிற்சிகளில் பொருத்தமான இடைச்சொற்களைப் பயன்படுத்திப் பூர்த்தி செய்யப் பணித்தல்.

வி.வ.கூ: ஆக்கமும் புத்தாக்கமும் உ.சி.தி: பகுத்தாய்தல் 21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்

# தொகுதி 9 கல்வி

## பாடம் 1 கற்பதில் சுதந்திரம்

### கலந்துரையாடுக.




### நடவடிக்கை 1

**கொடுக்கப்பட்ட தலைப்பையொட்டிய சார்பு, எதிர்வு கருத்துகளைத் தொகுத்துக் குழுவில் விவாதம் செய்திடுக.**

1.10.4 - தலைப்பையொட்டிய சார்பு, எதிர்வு கருத்துகளைத் தொகுத்து விவாதம் செய்வர்.

ஆசிரியர் குறிப்பு:

- சார்பு, எதிர்வு கருத்துகளை அறியச் செய்தல்.
- தலைப்பையொட்டிச் சார்பு, எதிர்வு கருத்துகளைத் தொகுத்து குழுவில் விவாதம் செய்யப் பணித்தல்.

வி.வ.கூ: ஆக்கமும் புத்தாக்கமும் உ.சி.தி: ஆய்வுச் சிந்தனை 21ஆம் நூ. தி: சிந்தனையாளர்

## வாசித்து அறிக.

இவ்வுலகில் மிகச் சிறந்த செல்வமாகக் கருதப்படுவது கல்விச் செல்வமாகும். ‘இந்த உலகை மாற்றக்கூடிய சக்தி வாய்ந்த ஆயுதம் கல்வி ஒன்றே’ என்றார் நெல்சன் மண்டேலா. மரங்களுக்கு எப்படி வேர் முக்கியமோ அதுபோன்று மனிதனுக்கு முக்கியமானது கல்வியாகும்.

மனிதர்களின் வாழ்க்கை முறையில் கல்வி என்பது அடிப்படைத் தேவைகளில் ஒன்று. ஆனால், கல்வி மட்டுமே மனிதனை உயரிய நிலைக்கு எடுத்துச் செல்வதன்று. சிறந்த பண்புகளும் வாழ்வில் மகிழ்ச்சியும் இருந்தால் மட்டுமே மனித வாழ்க்கை முழுமையாகும்.




சிறப்புறக் கற்பதால் நம்மால் சிறந்த சான்றிதழ்களைப் பெறவும், திறமைகளை வளர்த்துக் கொள்ளவும் முடிகிறது. கல்வித்தரத்திற்கு ஏற்ப நல்ல வேலைகளையும் தேடிக் கொள்ள முடிகிறது. தொடர்ந்து, நிறைய வருமானமும் ஈட்ட இயலும். இதன் மூலம், வாகனம், வீடு, நிலம் போன்ற சொத்துகளையும் வாங்கி அனுபவிக்கலாம். நினைத்த பொருள்களை வாங்கும் அளவுக்குப் பொருளாதார பலம் உள்ளவர்களாக வாழலாம்.

பொருளாதாரத்தில் எவ்வளவு மேம்பாடு கண்டாலும் நம் வாழ்க்கையின் மதிப்பு நல்ல பண்புகளில்தான் உள்ளது. இப்பண்பை வலியுறுத்தவே, பள்ளிகளில் இணைப்பாட நடவடிக்கைகள் நடத்தப்படுகின்றன. விடாமுயற்சி, தோல்வியில் கலங்காமை, அன்பு, பரிவு போன்ற நற்பண்புகளையும் மாணவர்கள் கற்றுக்கொள்கின்றனர்.

இன்றைய நாளில் வாழ்க்கையை மேம்படுத்தும் பாதையில் பலர் தங்களின் மகிழ்ச்சியையும் தொலைத்து விடுகின்றனர். மேலும், பணம் ஈட்டுவதற்காக அல்லும் பகலும் உழைத்துக் குடும்பத்தையே மறந்து விடுபவர்களும் உண்டு. வாழ்க்கையை உயர்த்துவது மட்டுமன்றி வெற்றியையும் தேடித் தரும் வல்லமை கொண்டது இணைப்பாடக் கல்வியாகும்.

**அருஞ்சொற்கள்**

- கல்விச்செல்வம்
- வருமானம்
- பொருளாதாரம்
- பரிவு
- வல்லமை

## நடவடிக்கை 1

**வாசிப்புப் பகுதியை வாசித்துத் தகவல்களை வகைப்படுத்திக் கூறுக.**

## நடவடிக்கை 2

**தகவல்களை வகைப்படுத்தி ஒரு முடிவுக்கு வருக; குழுவில் கலந்துரையாடுக.**

## நடவடிக்கை 3

**வாசிப்புப் பகுதியில் வாசித்த கருத்துகளைப் பட்டியலில் எழுதிக் காட்டுக.**

| கல்வி என்பது | கற்பதால் நாம் அடைவது |
|---|---|
| | |
| | |
| | |
| | |

| இணைப்பாடத்தின் நன்மைகள் | வாழ்க்கையில் வெற்றிபெறத் தேவையானவை |
|---|---|
| | |
| | |
| | |
| | |

2.4.13 - வாசிப்புப் பகுதியிலுள்ள தகவல்களை வகைப்படுத்தி ஒரு முடிவுக்கு வருவர்.

ஆசிரியர் குறிப்பு:

- வாசிப்புப் பகுதியை வாசித்து அறியச் செய்தல்.
- தகவல்களை வகைப்படுத்தி ஒரு முடிவுக்கு வரக் கூறுதல்.

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை உ.சி.தி: ஆக்கச் சிந்தனை 21ஆம் நூ. தி: அன்பானவர்/ பரிவுள்ளவர்

## பாடம் 2 இருட்டில் ஒளி

### வாசித்து அறிக.



மானிடப் பிறவி பெற்றும், விழிப் பார்வை இழந்து எழுத்துகளை அறியாமல் பலர் காலத்தைக் கழித்தனர். ஆனால், 19ஆம் நூற்றாண்டில் அந்த நிலை முற்றிலும் மாறிவிட்டது.

பார்வையற்றோர் என்றுமே கல்வி கற்க முடியாது என்ற பரிதாப நிலையை மாற்ற இளைஞன் ஒருவன் முனைந்தான். இதனால், கோடிக்கணக்கான பார்வையற்றோர் கல்வி கற்றனர். கல்லாதவரே கண்ணில்லாதவர் என்ற வாசகத்தைக் கண்ணில்லாதவரும் கற்றவரே என மெய்ப்பித்தனர்.

பிரான்ஸ் நாட்டில் பிறந்த லூயிஸ் பிரெயில் எனும் சிறுவனின் முயற்சியின் கண்டுபிடிப்புதான் பிரெயில். மூன்று வயதான லூயிஸ் பிரெயில் தன் அப்பாவின் பட்டறையில் தட்டுமுட்டுச் சாமான்களை வைத்து விளையாடிக் கொண்டிருந்தான். கூர்மையான ஊசி ஒன்று லூயிஸின் கண்ணைப் பதம் பார்த்துக் காயப்படுத்தியது. பட்ட காலிலே படும் என்பது போல மற்றொரு கண்ணும் பார்வையை இழந்தது.

கண் பார்வையை இழந்தாலும், லூயிஸ் மிகவும் கெட்டிக்காரனாகவும் கூர்ந்து சிந்திக்கும் ஆற்றலை உடையவனாகவும் திகழ்ந்தான். பன்னிரெண்டு வயது நிரம்பிய லூயிஸ் பயிலும் நிறுவனத்திற்கு ஓய்வு பெற்ற இராணுவ வீரர் ஒருவர் வருகை புரிந்தார். இருட்டின் எழுத்துகள் என்ற தகவல் பரிமாற்ற முறையை விளக்கினார். போர்க்களத்தில் எதிரிகளுக்குத் தெரியாமலும் எந்த ஒளியையும் பயன்படுத்தாமலும் தகவல் பரிமாற்றங்களுக்கு இந்த இருட்டின் எழுத்துகள் பயன்பட்டன.

விரல்களால் தாள்களைத் தடவிப் பார்த்து எண்ணங்களைப் பரிமாறும் முறையாக இது விளங்கியது. தாளில் நீளம் அகலம் எனும் பகுதியில் ஆறு புடைத்த புள்ளிகளை இணையாக வைத்துத் தகவலை அனுப்பினர். இந்தப் புதிய முறையைப் பிரெயில் ஆர்வமுடன் கற்றுக்கொண்டார். புத்துணர்வும் உற்சாகமும் பிறந்தது. பகலில் சூரியனைப் பார்க்க இயலாதவர்களின் வாழ்வில் வெளிச்சத்தைக் கொணர உறுதிபூண்டார்.

கவனமாகப் புள்ளிகளை எண்ணி எண்ணி எழுத்துகளைப் புரிந்துகொள்ளும் குறியீட்டு முறையைப் பிரெயில் உருவாக்கினார். பதினைந்து வயதிலேயே புதிய முறையை வடிவமைத்தார். 1829ஆம் ஆண்டு பார்வையிழந்தோர் எழுதிப் பழகும் முறையை வெளியிட்டார். பார்வையிழந்தாலும் படிக்க இயலும் எனும் கூற்றினை மெய்ப்பித்த பெருமையும் புகழும் லூயிஸ் பிரெயில் அவர்களையே சாரும்.




என்னை நுணுகு

## நடவடிக்கை 1

**தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்கு விடையளித்திடுக.**

1. பார்வையிழந்தவர் படிக்க இயலாதவர்கள் எனும் கூற்று மாறியது எப்பொழுது?

2. லூயிஸ் பிரெயில் என்பவருக்கு ஏற்பட்ட விபத்து யாது? எவ்வாறு நேர்ந்தது?

3. இருட்டின் எழுத்துகள் என்பதன் பயன்பாடு என்ன?

4. லூயிஸ் பிரெயிலுக்குப் புத்துணர்வை ஏற்படுத்தியது எது? ஏன்?

பிரெயில் எழுத்துகள் எனும் பெயர் வரக் காரணம் என்ன?

## நடவடிக்கை 2

**நவீனத் தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் தொடர்பாக ஊடகங்களில் பெறும் நன்மைகளைப் பற்றிக் குழுவில் கலந்துரையாடுக.**

2.6.9 - தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.


ஆசிரியர் குறிப்பு:

- உரைநடைப் பகுதியைப் பிழையற வாசிக்கக் கூறுதல்.
- கருத்துணர் கேள்விகளுக்குப் பதில் எழுதி வாசிக்கப் பணித்தல்

வி.வ.கூ: அறிவியலும் தொழில்நுட்பமும் உ.சி.தி: ஆய்வுச் சிந்தனை 21ஆம் நூ. தி: தொடர்பு கொள்ளும் திறம்

## பாடம் 3 விந்தை சக்தியில் நான்

### வாசித்து எழுதுக.




விந்தை சக்தி என்றாலே அனைவரும் வியந்து பார்க்கும் ஒன்றுதான். சுதந்திரமாக நம் எண்ணங்களுக்கு ஏற்பச் செயல்படும் ஒரு விந்தையான ஆற்றல் எனக்குக் கிடைத்தால் மட்டில்லா மகிழ்ச்சியடைவேன். இன்றைய இளையோரிடையே ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் கைப்பேசியில் ஓர் எச்சரிக்கை விசையைப் பொருத்துவேன். குடும்ப உறவுகளின் இனிமையைத் தவிர்த்துவிட்டுக் கைப்பேசியுடன் மட்டுமே தஞ்சமாகும் இளையோருக்கு விசை மூலம் அறிவுரை கூறச் செய்வேன். நேரத்தையும், காலத்தையும் சரியாக நிர்வகிக்கும் முறையை அந்த அதிநவீனக் கைப்பேசி மூலம் அறிவிப்பேன்.

ஒழுக்கம் தராத கல்வி, விளைச்சல் தராத நிலத்திற்குச் சமம் என்பதை இளையோர்களின் மனத்தில் பதிய வைப்பேன். பல மணி நேரம் கைப்பேசியில் புலனம், முகநூல், கீச்சகம், வலையொளி, ஊடலை என மூழ்கிக் கிடக்கும் மானிடர்கள், நான் தயாரித்த கைப்பேசியை முறையாகவும் அளவோடும் பயன்படுத்தக் கற்றுக் கொள்ளச் செய்வேன்.

நேரக் கட்டுப்பாடின்றிக் கைப்பேசியைப் பயன்படுத்துவதும், மின்கலம் வலிமை குறைந்ததும் மின்னேற்றி மூலம் மீண்டும் சக்தி பெறச் செய்கின்றனர். பல நேரங்களில் கைப்பேசி மின்னேற்றியில் இருக்கும்போதே

பயன்படுத்துகின்றனர். அதிக வெப்பத்தின் காரணத்தினால் கைப்பேசி வெடித்துச் சிதறுவதும் தீப்பிடிப்பதும் உண்டு. இத்தகைய விபத்துகளைத் தடுக்க அபாய ஒலிகளை எழுப்பி முன்னெச்சரிக்கை செய்யும் விசைகளையும் பொருத்துவேன்.

எரிபொருள் நிலையங்களிலும் பலர் கைப்பேசியைப் பயன்படுத்திப் பல விபத்துகள் ஏற்படக் காரணமாக இருக்கின்றனர். எனவே, வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பும் வேளையில் தீ! தீ என்னை முடக்கு! எனும் அபாயக் குரலை எழுப்பும் முறையையும் உள்ளடக்குவேன். வாகனத்தைச் செலுத்தும்போது கைப்பேசி பயன்பாடுகளால் பல விபத்துகள் நிகழ்கின்றன. இதைத் தடுக்க சாலையில் கவனம் செலுத்து! என்னைத் தொடாதே! என்ற ஒலிகளை எழுப்பும் முறையை கைப்பேசியில் புகுத்துவேன்.

கைப்பேசி தொல்லைப்பேசியாகாமல் இருக்க வேண்டும். மாற்றத்தைக் கொணரும் ஓர் அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தால் அனைவரும் பயன்பெற்று வாழ வழிசெய்வேன்.

**அருஞ்சொற்கள்**

- ஆக்கிரமித்து
- தஞ்சமாகும்
- மின்னேற்றி
- எரிபொருள்
- அபாயக்குரல்

## நடவடிக்கை 1

**கற்பனைக் கட்டுரையில் கூறப்பட்ட கருத்துகளை மீண்டும் கூறுக.**

## நடவடிக்கை 2

**கொடுக்கப்பட்ட தலைப்புகளில் ஏதேனும் ஒன்றனைத் தெரிவு செய்து கற்பனைக் கட்டுரை எழுதுக.**

1. நான் மருத்துவரானால்...
2. நான் உருவாக்க விரும்பும் அதிநவீன மடிக்கணினி.
3. நான் பறக்கும் சக்தியைப் பெற்றால்...
4. விந்தையான மகிழுந்து ஒன்றை நான் தயாரித்தால்...



3.6.13 - 100 சொற்களில் கற்பனைக் கட்டுரை எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு:

- கற்பனைக் கட்டுரையை வாசித்து அறியச் செய்தல்.
- தெரிவு செய்யும் தலைப்பில் கற்பனைக் கட்டுரை ஒன்றனை எழுதி வாசிக்கக் கூறுதல்.

வி.வ.கூ: ஆக்கமும் புத்தாக்கமும் உ.சி.தி: சிந்தனை வியூகம் 21ஆம் நூ. தி: தகவல் நிறைந்தவர்

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## திருக்குறளையும் பொருளையும் அறிக.



கழிப்பறைக்குச் சென்றுவிட்டு வகுப்பறைக்குள் நுழைந்தேன். என் பக்கத்தில் அமர்ந்திருந்த நண்பன் மூர்த்தி தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தான். வகுப்பு மாணவர்கள் அனைவரும் என் முகத்தையே உற்று நோக்கியதையும் கண்டேன். “என்ன ஆச்சு மூர்த்தி? ஏன் அழுகிறாய்?” என்றேன்.

“நீ... நீ...தான்,” என்றான் தேம்பியவாறு.

“நானா! நான் என்ன செய்தேன்?” என்றேன் தயக்கமாக.

வகுப்பாசிரியர் திருவாளர் வசந்தன் என்னைத் தமதருகில் வரும்படி அழைத்தார். தமக்கே உரிய மென்மையான குரலில், “மதியழகா, மூர்த்தியின் பணத்தை ஏதும் பார்த்தாயா?” என்றார். “நான் அவன் பணத்தைப் பார்க்கவில்லை ஐயா. இங்கு என்ன நடக்கிறது என்றும் எனக்குப் புரியவில்லை,” என்றேன் படபடத்த குரலில்.

அதற்குள் மாணவர்கள் சிலர், “ஓய்வு நேரத்தின்போது, மதியழகன் மட்டும்தான் தாமதமாக வகுப்பறையை விட்டு வெளியே வந்தான் ஐயா,” என்றனர். அதற்காக, “மதியழகன்தான் பணத்தை எடுத்தான் என்று நாம் குற்றம் சாற்றக்கூடாது மாணவர்களே, தீர விசாரிப்போம்!” என்று மாணவர்களைக் கண்டித்தார் ஆசிரியர்.

அக்கண்டிப்பு எனக்குச் சற்று மன ஆறுதலைத் தந்தது. மூர்த்தியின் அழுகை நிற்கவில்லை. தான் கொண்டு வந்த ஐம்பது ரிங்கிட் சுற்றுலாக் கட்டணப் பணத்தை யாரோ திருடிவிட்டனர் எனத் தேம்பிய குரலில் அவன் கூறினான். “ஐயா, நான் மதியழகனின் புத்தகப்பையைச் சோதிக்கட்டுமா?” என்றான் வகுப்புத் தலைவன்.

ஆசிரியர் பதில் கூறுமுன் வகுப்பறைக் கதவை ஓர் ஆடவர் தட்டினார். மூர்த்தியின் அழுகை சட்டென நின்றது. "மூர்த்தி அப்பா வந்துவிட்டார்," என்ற குரல் கேட்டது. வகுப்பறையில் நுழைந்ததும் தமது சட்டைப் பையில் இருந்து ஐம்பது ரிங்கிட்டை எடுத்து ஆசிரியரிடம் கொடுத்தார். தாம் கொடுத்த சுற்றுலாக் கட்டணத்தை மூர்த்தி மேசை மீது வைத்துவிட்டு வந்துவிட்டதாகக் கூறினார். மூர்த்தி தன் தவற்றை எண்ணித் தலைகுனிந்தான். எந்தத் தவறும் செய்யாத நான் தலைநிமிர்ந்து அமர்ந்தேன்.

ஆசிரியர் சொல்லித்தந்த,

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு. (423)**

என்ற திருக்குறள் எல்லா மாணவர்களுக்கும் நல்லதொரு படிப்பினையாக அமைந்தது.

## திருக்குறளும் பொருளும்

- **எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
  **மெய்ப்பொருள் காண்ப தறிவு. (423)**

  - எப்பொருளை யார் யாரிடம் கேட்டாலும் அதனைக் கேட்டவாறே கொள்ளாமல் அதில் எது உண்மை என்பதைக் கண்டறியச் செய்வதுதான் அறிவு.

### நடவடிக்கை 1

**உரையாடலை வாசித்துத் திருக்குறளையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறுக; எழுதுக.**

### நடவடிக்கை 2

**திருக்குறளுக்கு ஏற்ற அனுபவங்களை வகுப்பில் பகிர்ந்திடுங்கள்.**

### அருஞ்சொற்கள்

- தயக்கமாக
- மென்மையான
- தலைநிமிர்ந்து
- படிப்பினையாக
- தாமதமாக
- தேம்பியவாறு

4.3.5 - ஐந்தாம் ஆண்டுக்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு:
- கதையை வாசித்து அறியப் பணித்தல்.
- திருக்குறளையும் அதன் பொருளையும் கூறி எழுதச் செய்தல்.

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை | உ.சி.தி: உருவாக்குதல் | 21ஆம் நூ. தி: கொள்கையுள்ளவர்

## பாடம் 5 இலக்கணம்

### வலிமிகும் இடங்களை அறிக.

**வன்தொடர்க் குற்றியலுகரத்துக்குப்பின் வலிமிகும் (க்கு, ச்சு, ட்டு)**




### நடவடிக்கை 1

**சொற்களைச் சேர்த்து எழுதுக.**

1. சாக்கு + போக்கு = ______
2. பேச்சு + திறன் = ______
3. கூட்டு + சேர்ந்தனர் = ______
4. நாக்கு + புண் = ______
5. குச்சு + புடி = ______
6. கட்டு + கதை = ______

### நடவடிக்கை 2

**குழு முறையில் கலந்துரையாடி வன்தொடர்க் குற்றியலுகரத்துக்குப்பின் வலிமிகும் சில சொற்களைப் பட்டியல் இடுக.**

5.8.5 - க்கு, ச்சு, ட்டு, த்து, ப்பு, ற்று என முடிவுறும் வன்தொடர்க் குற்றியலுகரத்துக்குப்பின் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு:

- வலிமிகும் இடங்களை அறியச் செய்தல்.
- சொற்களைச் சேர்த்து எழுதி வாசித்துக் காட்டப் பணித்தல்.


வி.வ.கூ: ஆக்கமும் புத்தாக்கமும் உ.சி.தி: பயன்படுத்துதல் 21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்



# தொகுதி 17 இலக்கியமும் சுவையும்

## பாடம் 1 செய்நன்றி

### கலந்துரையாடுக.




கர்ணன் என்பவன் மகாபாரதத்தில் வரும் முக்கியக் கதாபாத்திரம். இவன் நன்றிக்கடனுக்கே எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவன். இவன் பாண்டவர்களில் மூத்தவன். ஆனாலும், சூழ்நிலையால் தேரோட்டி மகனாக வாழ்ந்தான்.






தன்னை உலகம் அனாதை என்று சொல்லிற்று. தேரோட்டி மகன் என்று கேலி பேசிற்று. அந்த நிலையை மாற்றி அங்கதேசத்து அரசனாக்கி மேல் நிலை மக்களுடன் பழகவும் உறவாடவும் வாய்ப்பு நல்கிய துரியோதனனை மறக்கலாமா? நன்றி கொல்லலாமா? இன்று உண்மையான சகோதரர்கள் தர்மன், பீமன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன் ஆகிய பஞ்ச பாண்டவர்கள் என்று அறிந்து கொண்டதால் அவர்கள் பக்கம் சேரலாமா; கூடாது என்று கருதியது கர்ணனின் உள்ளம்.






கர்ணனின் இரண்டு மேன்மையான குணங்கள்தான் இன்றும் நமக்கு நினைவில் உள்ளது. ஒன்று கொடைத்தன்மை மற்றொன்று, நன்றி மறவாத பெருந்தன்மை. இரண்டு பண்புகளும் சேர்ந்து கர்ணனை ஓர் உன்னதமான வீரனாகக் காட்டியது.





நல்லதோ கெட்டதோ கட்சி மாற வேண்டும் என்ற நப்பாசை இல்லாத உறுதிப்பாடு கொண்டவன் கர்ணன். இந்த எண்ணத்திற்கு அடிப்படை நன்றி! நன்றி! ஒருவர் முன் செய்த நன்மையை மறப்பது அறம் அன்று. அவர் செய்த தீமையை அப்பொழுதே மறந்து விடுவது அறமாகும்.




**எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு.** (110)

எந்த அறத்தை அழித்தவர்க்கும் தப்பிழைக்க வழி உண்டாகும். ஒருவர் செய்த உதவியை மறந்து அழித்தவனுக்கு உய்வு இல்லை என்பதுவே இக்குறளின் பொருளாகும்.



**என்னை நுணுகு**



இக்குறட்பாவுக்கு இலக்கியமாகத் திகழ்ந்து நன்றி செலுத்துவதில் துரியோதனனுக்காக உயிரையும் கொடுத்த கர்ணனை உலகம் நன்றிக்கு எடுத்துக்காட்டாக என்றும் நவிலும் என்பதில் ஐயமில்லை அல்லவா?

## நடவடிக்கை 1

**செய்நன்றி பற்றிய முக்கியக் கருத்துகளையொட்டிக் குழுவில் கலந்துரையாடுக. உமது கருத்தைக் கூறுக.**

1.3.6 - செவிமடுத்தவற்றிலுள்ள முக்கியக் கருத்துகளையொட்டிக் கருத்துரைப்பர்.

ஆசிரியர் குறிப்பு:

- கருத்துகளை வாசித்து அறியச் செய்தல்.
- கருத்துகளைக் கொண்டு காப்பியக் கதைகளைக் கூறச் செய்தல்.

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை உ.சி.தி: கட்டுவியம் 21ஆம் நூ. தி: தகவல் நிறைந்தவர்

# பாடம் 2 சுவைமிகு இன்சொல்

## வாசித்து உணர்க.



உணவுக்கு அறுசுவைபோல்
உரைத்ததற்கும் சுவைகள் உண்டு
உணர்வுக்கு ஏற்றவாறு
உரைத்தலின் சுவையும் மாறும்

ஒன்றையே திரும்பச் சொன்னால்
உவர்ப்பான உப்புப் பேச்சு
பண்ணியே அதையே மீண்டும்
பகர்ந்திடல் புளிப்புப் பேச்சு

விரும்பாத போதுரைத்தல்
வாழைப்பூத் துவர்ப்புப் பேச்சு
விருப்பத்திற்கெதிராய்ப் பேசல்
வேப்பங்காய் கசப்புப் பேச்சு

கனன்றெழும் கோபத்தை நாம்
காட்டும்சொல் எரிப்புப் பேச்சு
கனிவோடு இதமாய்க் கூறல்
கரும்பென இனிக்கும் பேச்சு!

பேசிடும் வகைகள் கண்டோம்
பேசாது இருத்தல் நன்றாம்
பேசத்தான் வேண்டுமாயின்
பேசுவோம் இனிப்புப் பேச்சு

உவத்தலாம் உரைகள் ஒன்றே
உலகத் தோர்விரும்பக் கேட்பர்
எவர்க்குமே இனிப்புப் பேச்சு
என்றைக்கும் சிறப்புச் சேர்க்கும்!

- என். சுந்தர் ராமன்

### நடவடிக்கை 1

**கவிதையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு, நயம் ஆகியவற்றுடன் வாசிப்பர்.**

### நடவடிக்கை 2

**கவிதையில் அடங்கியிருக்கும் நயங்களை விளக்கிக் கூறுக.**

செவிமடுத்திடுக

2.3.14 - கவிதையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு, நயம் ஆகியவற்றுடன் வாசிப்பர்.


ஆசிரியர் குறிப்பு:

- கவிதையை வேகம், தொனி, உச்சரிப்பு, நயத்துடன் வாசிக்கச் செய்தல்.
- கவிதையில் கூறப்படும் கருத்துகளை வரிசைப்படுத்தி உரையாடச் செய்தல்.

வி.வ.கூ: சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் உ.சி.தி: பகுத்தாய்தல் 21ஆம் நூ. தி: சிந்தனையாளர்

# பாடம் 3 சூழ்ச்சியின் விளைவு

## வாசித்து எழுதுக.




3.6.14 - 100 சொற்களில் உரையாடல் எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு:

- உரையாடலைப் பாகமேற்று வாசிக்கச் செய்தல்.
- உரையாடலை முறையாக எழுதி வாசிக்கக் கூறுதல்.

வி.வ.கூ: ஆக்கமும் புத்தாக்கமும் உ.சி.தி: உருவாக்குதல் 21ஆம் நூ. தி: சிந்தனையாளர்

## நடவடிக்கை 1

**உரையாடலை வாசித்து எழுதி முடித்திடுக.**

## நடவடிக்கை 2

**கொடுக்கப்படும் சூழலுக்கேற்ற உரையாடலை எழுதுக.**

அ. பள்ளியின் தமிழ்மொழிக் கழகம் புத்தகக் கண்காட்சிக்குச் செல்ல ஏற்பாடு செய்கிறது. மாணவர்கள் பெற்றோரிடம் அனுமதி பெற்றுவரப் பணிக்கப்படுகின்றனர். நீயும் அச்சுற்றுலாவில் கலந்து கொள்ள ஆவல் கொண்டுள்ளாய். உன் பெற்றோரிடம் அனுமதி கேட்கும் உரையாடலை எழுதிக் காட்டுக.

ஆ. கனிமொழியும் பவளக்கொடியும் பள்ளி நூலகத்தின் பொறுப்பு மாணவர்களாகப் பணியாற்றினர். அன்றைய தினம் மாணவன் ஒருவன் தான் இரவல் வாங்கிய நூலைத் தொலைத்து விட்டதாகக் கூறினான். அங்கு நடைபெறக்கூடிய உரையாடலை எழுதி வாசித்திடுக.

இ. பள்ளி முடிந்து வீடு திரும்புகிறாய். உன் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார் உன் தாய். அவருடன் நீ பேசுவதை முழு உரையாடலாக எழுதுக.

## நடவடிக்கை 3

**உரையாடலை எழுதி முடித்திடுக.**


கனிமொழி: வாணி, நேற்று உன் அண்ணனுக்குத் திருமணம் நடந்ததாகக் கேள்விப்பட்டேன். உண்மையா?

வாணி: ஆமாம், கனிமொழி. நேற்று என் அண்ணனுக்குத் திருமணம் இனிதே நடந்தது.

கனிமொழி: நீ ஏன் என்னிடம் கூறவில்லை?

வாணி:

## இணைமொழியையும் பொருளையும் அறிக.



நிருபர்: மகிழ்ச்சி. தாங்கள் மேன்மேலும் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்க தாமரை இதழ் சார்பாக வாழ்த்துகிறேன். மிக்க நன்றி.

மலரவன்: நன்றி ஐயா.

## இணைமொழியும் பொருளும்

- **பேரும் புகழும்** - கீர்த்தி / புகழ் / மாண்பு
- **ஒளிவு மறைவு** - ஒளித்தலும் மறைத்தலும்
- **அரை குறை** - முழுமை பெறாத நிலை
- **கல்வி கேள்வி** - கல்வி அறிவு / படிப்பு

## நடவடிக்கை 1

**சரியான இணைமொழிகளை எழுதுக.**

1. நற்குடிமகனாகத் திகழ நாம் ________ சிறந்து விளங்க வேண்டும்.
2. எந்தச் செயலையும் ________ செய்து முடிக்கக்கூடாது என ஆசிரியர் அறிவுறுத்தினார்.
3. மாணவர்கள் தமக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளை ________ இன்றிப் பெற்றோரிடம் கூற வேண்டும்.
4. திரு. கவியரசன் ஏழை எளியவர்களுக்குத் தம்மால் இயன்ற பொருளுதவியைச் செய்து மக்களின் மத்தியில் ________ பெற்றார்.
5. ________ மட்டுமின்றி என் தங்கை பூப்பந்து விளையாட்டிலும் சிறந்து விளங்குகிறாள்.
6. சிறந்த பட்டதாரி எனும் விருது பெற்ற தங்களின் மகனை மேலும் ________ பெற்றுவாழ வேண்டும் எனப் பெற்றோர் வாழ்த்தி மகிழ்ந்தனர்.
7. பள்ளியில் தன் அண்ணன் செய்த குறும்புகளை ________ இன்றி செம்மலர் பெற்றோரிடம் கூறினாள்.



4.4.5 - ஐந்தாம் ஆண்டுக்கான இணைமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு:

- நேர்காணல் பகுதியைப் பிழையற வாசிக்கப் பணித்தல்.
- இணைமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து வாக்கியங்களில் எழுதப் பணித்தல்.

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை உ.சி.தி: சீர்த்தூக்கிப் பார்த்தல் 21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்

## பாடம் 5 இலக்கணம்

### விகாரப் புணர்ச்சியில் திரிதல் விகாரத்தை அறிக.

நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் புணரும்போது **ஓர் எழுத்து மற்றோர் எழுத்தாகத் திரிந்து வருவது** திரிதல் புணர்ச்சியாகும்.

**லகர, ளகர மெய்யீறு வல்லினத்தோடு புணர்தல்**

- **ல் முன் த் → ற் ஆகும்**

எடுத்துக்காட்டு:

| நிலைமொழி | | வருமொழி | |
|---|---|---|---|
| கல் | + | தூண் | = கற்றூண் |

- **ள் முன் த் → ட் ஆகும்**

எடுத்துக்காட்டு:

| நிலைமொழி | | வருமொழி | |
|---|---|---|---|
| முள் | + | தாள் | = முட்டாள் |

### நடவடிக்கை 1

**பிரித்தெழுதுக.**

1. புற்றரை = ______
2. கற்றாழை = ______
3. சொற்றுணை = ______
4. முற்றாழை = ______
5. நற்றமிழ் = ______
6. நற்றுணை = ______

### நடவடிக்கை 2

**சரியான விடை எழுதுக.**

1. கற்றல் கற்பித்தல் நடவடிக்கையின்போது மாணவர்கள் கலந்துரையாடலின் வழி பல இனிய ______ களை உருவாக்கினர்.
2. கடுங்காவலிலிருந்து தப்பித்து ஓடிய சிறைக்கைதி ______ அதிகாரியிடம் பிடிபட்டான்.
3. மாணவர்கள் ______ துணைவன் எனும் பயிற்சி நூலில் உள்ள பயிற்சிகளைச் செய்தனர்.

5.7.4 - திரிதல் விகாரப் புணர்ச்சியில் லகர, ளகர மெய்யீறு வல்லினத்தோடு புணர்தல் பற்றி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு:


- திரிதல் விகாரப் புணர்ச்சி லகர, ளகர மெய்யீறு வல்லினப் புணர்தல் பற்றி அறியச் செய்தல்.
- லகர, ளகர மெய்யீறு வல்லினத்தில் புணர்தல் பயிற்சிகளைச் செய்யப் பணித்தல்.

வி.வ.கூ: நன்னெறிப்பண்பு உ.சி.தி: பகுத்தாய்தல் 21ஆம் நூ. தி: சிந்தனையாளர்


# தொகுதி 18 குடும்பமும் நலமும்

## பாடம் 1 நற்சிந்தனை கொள்வோம்


### கலந்துரையாடுக.



- எனக்கு அறிமுகம் இல்லாத ஒருவர் இவர்.
- இது தீய தொடுதலாயிற்றே! நான் இதைத் தவிர்க்க வேண்டும்.



- கைப்பேசியில் கணினி விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்தேன்.
- அப்பா தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தார்.
- திடீரென நெஞ்சு வலியால் அவதியுற்றார்.



- வீட்டிற்கு அருகில் புறாக்கள் பல தீனியைத் தின்று கொண்டிருக்கின்றன.
- அவ்வழியாக வந்த ஆடவர்கள் இருவர் அப்புறாக்களை வலையில் பிடித்துச் செல்கின்றனர்.

### நடவடிக்கை 1

**படங்களுக்குப் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திச் சிக்கலுக்குத் தீர்வு கூறுக.**

1.7.20 - பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திச் சிக்கலுக்குத் தீர்வு கூறுவர்.

ஆசிரியர் குறிப்பு:

- சூழல் படங்களைப் பார்த்துச் சிக்கல்களை அறியச் செய்தல்.
- பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திச் சிக்கலுக்குத் தீர்வு காணப் பணித்தல்.

வி.வ.கூ: நன்னெறிப் பண்பு | உ.சி.தி: ஆக்கச் சிந்தனை | 21ஆம் நூ. தி: தாங்கும் வலிமை

## பாடம் 2 மனநலம்

### வாசித்து அறிக.



மனிதர்களைத் தாக்கும் நோய்களில் மனச்சிதைவு நோயும் ஒன்றாகும். மனச்சிதைவு நோய் பல காரணங்களால் ஏற்படுகின்றது. இந்நோய், மூளையில் உள்ள சில இரசாயனக் குறைபாடுகளால் ஏற்படுகின்றது. மரபு வழியாகவும் இந்நோய் வரலாம். போதைப் பொருள்கள் உட்கொள்வதாலும் இந்நோய் தாக்குவதுண்டு.

மனச்சிதைவு நோய் ஒரு தொற்று நோய் அல்ல. மக்கள் தொகையில் நூறில் ஒருவருக்கு இந்நோய் ஏற்பட வாய்ப்புண்டு. இந்நோய்க்கான அறிகுறிகள் பல உள்ளன. அவற்றுள் ஒன்று நடத்தையில் மாற்றம் ஏற்படுவது ஆகும். சிலர் தனக்குத்தானே பேசிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் இருப்பர். பேச்சினில் குழப்பமும் தெளிவில்லாத சிந்தனையும் ஏற்படும். தினசரி நடவடிக்கைகளான குளித்தல், சாப்பிடுதல், சீரான உடைகள் உடுத்துதல் போன்ற இயல்பான செயல்களும் பாதிப்படையும்.

கல்வி பயிலும் மாணவர்களாக இருப்பினும், அவர்கள் கல்வியைத் தொடர முடியாத நிலையும் ஏற்படுவதுண்டு. இந்நோய் கண்டவர்கள் தனியாக இருக்கும் பொழுது காதில் ஏதோ குரல் கேட்பது போன்று உணர்வர். மேலும், தேவையற்ற சந்தேகங்களும் ஏற்படும். தன்னைப் பற்றிய குறைகளை அனைவரும் பேசுகிறார்கள் என்றும் தன்னைப் பின் தொடர்ந்து வருகிறார்கள் என்றும் நினைப்பர். இதனால், குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள் அனைவரிடமும் சண்டையிட்டுக் கொள்வர். வீட்டை விட்டு வெளியேறி விடவும் செய்வர்.

இந்நோய் கண்டவர்களைப் பொறுத்தவரை அவர்கள் காண்பது அனைத்தும் உண்மையே என்பர். மனச்சிதைவுக்கு ஆளானவர்களை உடனடியாக மருத்துவரிடம் அழைத்துச் செல்ல வேண்டும். அதன்பிறகு, மன நல மருத்துவரிடம் சிகிச்சை பெறப் பரிந்துரைக்கலாம். மருத்துவ முறையில் மனச்சிதைவு நோயைக் குணப்படுத்த இயலும். மருந்துகளைத் தொடர்ந்து உட்கொள்வதால் விரைவில் நலம் பெறலாம். மேலும் யோகாசனம், தியானம், மெதுநடை போன்ற எளிமையான பயிற்சிகள் தன்னம்பிக்கையையும் சுயமதிப்பையும் ஏற்படுத்தி இந்நோயிலிருந்து முழுமையாக விடுபட வழிவகுக்கும்.

**அருஞ்சொற்கள்**

- மனச்சிதைவு
- மக்கள் தொகை
- தாக்குவதுண்டு
- பரிந்துரைக்கப்படலாம்
- சுய மதிப்பு

## நடவடிக்கை 1

**அறிவியல் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்கு விடையளித்திடுக.**

1. மனச்சிதைவு நோயின் முக்கியக் காரணங்கள் யாவை?
2. இந்நோய் கண்டவர்களிடம் காணப்படும் மாற்றங்கள் யாவை?
3. குடும்ப உறுப்பினர்கள் நண்பர்களுடன் சண்டை போடுவதன் காரணம் என்ன?
4. மனச்சிதைவு கண்டவர்களுக்கான உடனடி நடவடிக்கை என்ன?
5. இந்நோயினால் மாணவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் யாவை?
6. நோயாளிகள் மருந்துகளைத் தவிர்த்து, செய்ய வேண்டிய நடவடிக்கைகள் யாவை?

ஒரு மனநல மருத்துவராகப் பணியாற்றுபவர் கடைப்பிடிக்க வேண்டிய பண்பு நலன்கள் யாவை? ஏன்?

2.6.7 - அறிவியல் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

ஆசிரியர் குறிப்பு:

- உரைநடைப் பகுதியைப் பிழையற வாசிக்கக் கூறுதல்.
- கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிக்கப் பணித்தல்.

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை | உ.சி.தி: மதிப்பிடுதல் | 21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்

## பாடம் 3 உறவுகளின் இனிமை

### வாசித்து எழுதுக.

மணிக்கண்ணன்,
34, ஜாலான் செம்பங்கி 2,
தாமான் செம்பங்கி,
14000 பினாங்கு.

15 ஆகஸ்ட் 2021

அன்புள்ள தோழா,

உன் மடல் கிடைக்கப்பெற்றேன். நெடு நாள்களாக உங்களை விட்டுப் பிரிந்திருந்த உன் தாத்தாவும் பாட்டியும் மீண்டும் உன் பெற்றோருடன் வந்து இணைந்துவிட்டதைக் கேட்டு அகம் மகிழ்ந்தேன்.

என் அருமை நண்பா, தாத்தா, பாட்டி என்கிற உறவுகள் மதிக்கத்தக்கவை. அவர்கள் இருவரும் நமக்குச் சிறந்த ஆலோசகர்களாகவும் வழிகாட்டிகளாகவும் அனுபவ மருத்துவர்களுமாவர். இவற்றுக்கும் மேலாக கதை சொல்லி நல்வழிப்படுத்தும் நல்ல நண்பர்களாகவும் ஆசான்களாகவும் திகழ்கின்றனர். தாத்தா பாட்டியிடம் கதை கேட்காத தலைமுறைகள் பலவற்றை இழந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

நெகிழ்ச்சியான அன்புக்கு என் தாத்தாவே நல்ல உதாரணம். அவருக்குக் காது கேளாது. நான் முறுக்குச் சாப்பிடும் போதெல்லாம் அவர் தமது செவிக் கருவியைப் பொருத்திக் கொள்வார். நான் முறுக்குச் சாப்பிடும்போது எழும் ‘கரக் முரக்’ எனும் சத்தத்தைக் கேட்பதில் அவருக்குக் கொள்ளை இன்பம்.

சளியோ இருமலோ, உடனே ஓடிச் சென்று தம் வைத்தியத்தை ஆரம்பித்துவிடுவார் பாட்டி. ஆமாம் நண்பா, ஒவ்வொரு மனிதனும் உறவுகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். ஆனால், இன்றைய நவீன உலகில் பலர் உறவுகளின் உறவாடல்களைப் பகிர்ந்துகொள்ள இயலாமல் தனித்தனித் தீவுகளாக வாழும் அவலத்தைத்தான் காண முடிகிறது. கால ஓட்டத்தினால் இதனைத் தவிர்க்க முடியாவிட்டாலும் குறைக்க முயலலாம்.

நன்றி.

இப்படிக்கு,
*மணிக்கண்ணன்*

### நடவடிக்கை 1

**நட்புக் கடிதத்தை வாசித்துப் பதில் கடிதம் ஒன்றனை 100 சொற்களில் எழுதுக.**

3.6.18 - 100 சொற்களில் நட்புக் கடிதம் எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு:

- நட்புக் கடிதத்தை வாசித்து விளக்கம் பெறச் செய்தல்.
- பதில் கடிதம் ஒன்றனை எழுதி வாசிக்கப் பணித்தல்.

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை   உ.சி.தி: ஆக்கச் சிந்தனை   21ஆம் நூ. தி: அன்பானவர்/ பரிவுள்ளவர்

## மரபுத்தொடரையும் பொருளையும் அறிக.

ஏழை விவசாயி ஒருவன் கிளி ஒன்றனை வளர்த்தான். "அதிலென்ன சந்தேகம்," என்ற வார்த்தைகள் தவிர வேறு எதுவும் அக்கிளிக்குப் பேசத் தெரியாது. அதற்குப் புதிய வார்த்தைகள் கற்றுக் கொடுக்க முயன்ற விவசாயி தோல்வியே அடைந்தான். வெறுத்துப்போன அவன் கிளியை யாருக்காவது விற்றுவிட எண்ணினான்.



அக்கிளியை வாங்கிக் கொள்ளப் பணக்காரன் ஒருவன் வந்தான். கிளியின் விலையைக் கேட்டான். "நானூறு ரிங்கிட் மட்டுமே," என்றான் விவசாயி. "இந்தச் சின்ன பறவைக்கு இவ்வளவு விலையா?" என்றான். "அதிலென்ன சந்தேகம்?" எனக் கிளி பேசிற்று.

கிளியின் பேச்சில் மகிழ்ந்த பணக்காரன் பணத்தைக் கொடுத்துவிட்டுக் கிளியை எடுத்துச் சென்றான். ஏழை விவசாயிக்குக் கிடைத்த பணம் அவனது ஓட்டைக் குடிசையைச் சீர்படுத்த உதவியாய் இருந்தது. தனக்குக் **கை கொடுத்த** பணக்காரனுக்கு நன்றி கூறிக் கொண்டான். ஓரிரு நாள்களில் பணக்காரன் உண்மை நிலையை அறிந்துகொண்டான். 'அதிலென்ன சந்தேகம்' என்பதைத் தவிர வேறு எதுவும் கிளிக்குச் சொல்லத் தெரியாததை உணர்ந்த பணக்காரன் மிகவும் நொந்து போனான். விவசாயி மிக அழகாகப் பேசி தனக்குக் **காது குத்திவிட்டானே** எனச் சினங்கொண்டான். நானூறு ரிங்கிட் கொடுத்து கிளியை வாங்கிய நான் மதி இல்லாதவன் என்று தனக்குத்தானே பேசினான். "இப்படிப் பிறரை ஏமாற்றுபவர்கள் என்றாவது ஒரு நாள் **கையும் களவுமாய்** நிச்சயம் மாட்டிக் கொள்வர்" எனப் பணக்காரன் கோபப்பட்டான். கோபத்தோடு கிளியை நோக்கினான். அவன் நிலையறியாத கிளி அப்போதும் சொன்னது, "அதிலென்ன சந்தேகம்?"

## மரபுத்தொடரும் பொருளும்

- **கை கொடுத்தல்** - தக்க நேரத்தில் உதவி செய்தல்
- **காது குத்துதல்** - சாமர்த்தியமாக ஏமாற்றுதல்
- **கையும் களவுமாய்** - குற்றம் அல்லது தவறு இழைக்கும் தருணத்திலேயே

## நடவடிக்கை 1

**சரியான மரபுத்தொடரை எழுதுக.**

1. தேர்வுக்கான கட்டணத்தைச் செலுத்த முடியாத நிலையிலிருந்த அன்பழகனுக்கு அவனின் நண்பன் பணம் கொடுத்து உதவினான்.
2. காவல் துறை அதிகாரி வீட்டிலேயே திருட முயன்ற திருடன் அத்தருணத்தில் பிடிபட்டான்.
3. வழியில் நடந்து சென்ற மூதாட்டியிடம் ஆடவன் ஒருவன் சாமர்த்தியமாகப் பேசி, அவரது பணப்பையைத் திருடினான்.
4. வீடு வீடாகச் சென்று நன்கொடை திரட்டும் சிலரின் சாமர்த்தியமான வார்த்தைகளை நம்பக் கூடாது.
5. பேருந்தைத் தவறவிட்ட கோதைக்குத் தக்க நேரத்தில் வகுப்பாசிரியர் உதவி செய்தார்.
6. நெடுநாள்களாகவே பலரை ஏமாற்றிப் பணம் பறித்த கும்பலைத் தக்க தருணத்தில் காவல் துறையினர் பிடித்தனர்.

## நடவடிக்கை 2

**வக்கியங்களை எழுதுக.**

1. கை கொடுத்தல் - ______________________
2. காது குத்துதல் - ______________________
3. கையும் களவுமாய் - ______________________

4.6.5 - ஐந்தாம் ஆண்டுக்கான மரபுத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.



ஆசிரியர் குறிப்பு:

- கதையை வாசிக்கப் பணித்தல்.
- மரபுத்தொடர்களின் பொருளை அறிந்து நடவடிக்கைகளைச் செய்வித்தல்.

வி.வ.கூ: நன்னெறிப் பண்பு | உ.சி.தி: பகுத்தாய்தல் | 21ஆம் நூ. தி: தொடர்பு கொள்ளும் திறன்

## திரிதல் விகாரப் புணர்ச்சியை அறிக.

- நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் புணரும்போது **ஓர் எழுத்து மற்றோர் எழுத்தாகத் திரிந்து வருவது** திரிதல் புணர்ச்சியாகும்.

### ணகர, னகர மெய்யீறு வல்லினத்தோடு புணர்தல்

**ண் முன் த் → ட் ஆக மாறும்**

எடுத்துக்காட்டு:

மண் + தலம் = மண்**ட**லம்

தண் + தமிழ் = தண்**ட**மிழ்

**ன் முன் த் → ற் ஆக மாறும்**


எடுத்துக்காட்டு:

பொன் + தகடு = பொற்**ற**கடு

பொன் + தோடு = பொற்**றோ**டு

## நடவடிக்கை 1

**உரையாடலில் கூறப்பட்ட திரிதல் விகாரப் புணர்ச்சிச் சொற்களை அடையாளம் கண்டு பிரித்தெழுதிக் கூறுக.**




5.7.3 - திரிதல் விகாரப் புணர்ச்சியில் ணகர, னகர மெய்யீறு வல்லினத்தோடு புணர்தல் பற்றி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு:

- திரிதல் விகாரப் புணர்ச்சியை அறியச் செய்தல்.
- சொற்களை அடையாளம் கண்டு பிரித்தெழுதி வாசிக்கப் பணித்தல்.

வி.வ.கூ: ஆக்கமும் புத்தாக்கமும் உ.சி.தி: பகுத்தாய்தல் 21ஆம் நூ. தி: தகவல் நிறைந்தவர்

# தொகுதி 19 தமிழர் கலைகள்

## பாடம் 1 கைவினைக் கலைகள்

### கலந்துரையாடுக.




மரச்சிற்பம்

- கைவினைப் பொருள்கள்
- எண்ணங்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்துகின்றன
- மனத்திற்கு மகிழ்ச்சி தருகின்றன

மண்பாண்டங்கள்



- சிறுதொழில் வியாபாரம்
- சுய வருமானம்
- வாழ்க்கைத் தரம் உயர்தல்
- வறுமை ஒழித்தல்



பூமாலை

- தொன்மையான கலைகள் தொடருதல்
- மக்களுக்குப் புலப்படுத்துதல்
- குடும்பத்தின் பாரம்பரியத் தொழில்
- கலைகள், பண்பாட்டினை வளர்த்தல்

மணி மாலைகள்



- நாட்டின் மேம்பாடு
- பொருளாதாரம்
- சிறுதொழில் செய்யும் பண்பாடு
- தொழில் துறை வளர்ச்சி

### நடவடிக்கை 1

**தலைப்பையொட்டிய கருத்துகளைத் தொகுத்துக் குழுவில் உரையாடுக.**

1.10.3 - தலைப்பையொட்டிய கருத்துகளைத் தொகுத்துக் கூறுவர்.

ஆசிரியர் குறிப்பு:

- கருத்துகளை வாசித்து விளக்கிக் கூறச் செய்தல்.
- தலைப்பையொட்டிய கருத்துகளைத் தொகுத்துக் குழுவில் உரையாடப் பணித்தல்.

வி.வ.கூ: தொழில் முனைப்பு உ.சி.தி: ஆய்வுச் சிந்தனை 21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்

# பாடம் 2 நடனக் கலைகள்

## வாசித்து அறிக.



தமிழர்களின் பாரம்பரியத்தில் நடனக்கலை மிகவும் முக்கியம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. நடனம் என்பது தாளத்துக்கும் இசைக்கும் அமைவாக உடலை அசைத்து நிகழ்த்தப்படும் ஒரு கலை வடிவமாகும்.

நடனங்கள் பல்வேறு வகையில் பல பெயர்களைக் கொண்டு ஆடப்படுகின்றன. மேலும், எல்லா நடனங்களும் சில சிறப்பு இயல்புகளைக் கொண்டுள்ளன என்றால் அது மிகையாகாது. ஆனந்தக் கூத்து எனும் நடனம் மகிழ்ச்சியான நிலையில் இருக்கும்போது ஆடப்படும் ஒரு வகை நடனமாகும். ஆனந்தம் என்ற சொல்லானது மகிழ்ச்சி என்பதாகும். எனவே, இந்நடனத்தைத் திருவிழாக் காலங்களில் ஆடி மகிழ்வார்கள்.

மக்கள் தங்கள் கவலைகளை மறந்து ஆனந்தக் கூத்தைக் கண்டு இரசிப்பர். திருமந்திரம் எனும் நூலை எழுதிய திருமூலர், ஆனந்தக் கூத்து நடனத்தை ஐந்து பிரிவுகளாகப் பிரித்துக் கூறியுள்ளார். அவற்றில் மனித இனத்திற்குத் தேவையான பல ஆழமான கருத்துகளையும் பாடல்களாக அமைத்துச் சிறப்பித்துள்ளார்.

திருவிழாக் காலங்களில் ஆடப்படும் நடனமாக ஒயிலாட்டம் என்ற நடனமும் பிரசித்தி பெற்றதாகும். ஒயில் என்ற சொல்லுக்கு அழகு, அலங்காரம் எனவும் பொருள் கூறலாம். ஒயிலாட்டத்தில் ஆடுபவர்கள் இரண்டு விதமான வண்ணத் துணிகளைப் பயன்படுத்துவர். ஒரு துணியைத் தலையில் கட்டிக் கொண்டும், மற்றொன்றைக் கையில் பிடித்தும் ஆடுவது வழக்கமாகும்.



ஒயிலாட்டத்தில் ஒரு குழுவில் பன்னிரெண்டு பேர் வீதம் இரண்டு வரிசையில் நின்று ஆடுவார்கள். இரண்டு வரிசையில் நிற்கும் ஆட்டக்காரர்கள் ஒருவரை ஒருவர் தொடாமல் ஆடுவர். ஒயிலாட்டத்தின்போது தவில், சிங்கி, சலங்கை போன்ற இசைக் கருவிகளும் இசைக்கப்படும்.

கிராமப் புறங்களில் திருவிழாக் காலங்களில் காளையாட்டம் எனும் நடனத்தையும் ஆடுவார்கள். காளைமாட்டின் உருவத்தைப் பொம்மைகளாகச் செய்து அதற்குள் நின்றுகொண்டு ஆடுவார்கள். காளைமாடுகள் போல் துள்ளிக் குதித்து ஆடி மகிழ்வர். சில வேளைகளில் காளைமாடுகள் முட்டுவது போன்ற பாவனை செய்து ஆடுவர். இதனால், பார்வையாளர்கள் பயம் கொண்டு ஓடுவதும் நகைச்சுவையாக இருக்கும்.

பாரம்பரியக் கலைகள் அனைத்தும் மக்களுக்கு மகிழ்ச்சி தருவனவாகவே கருதப்படுகின்றன. எனவே, இக்கலைகளை அறிந்து அழியாமல் செய்திடல் நமது கடமையென எண்ண வேண்டும்.

என்னை நுணுகு

## நடவடிக்கை 1

**வாசிப்புப் பகுதியில் கூறப்பட்ட முக்கியத் தகவல்களை அடையாளம் கண்டு வாசித்திடுக.**

## நடவடிக்கை 2

**பாரம்பரியக் கலைகளை அறிவதால் ஏற்படும் நன்மைகளை வரிப்படத்தில் பட்டியலிட்டுக் காட்டுக.**

2.4.10 - வாசிப்புப் பகுதியிலுள்ள முக்கியத் தகவல்களை அடையாளம் காண்பர்.

ஆசிரியர் குறிப்பு:
- வாசிப்புப் பகுதியை வாசிக்கச் செய்தல்.
- முக்கியத் தகவல்களை அடையாளம் கண்டு பட்டியலிட்டு வாசிக்கப் பணித்தல்.

வி.வ.கூ: தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் உ.சி.தி: பகுத்தாய்தல் 21ஆம் நூ. தி: தகவல் நிறைந்தவர்

## பாடம் 3 மாணவர்களும் கலைகளும்

### வாசித்து எழுதுக.

**முன்னுரை**
ஆயகலைகள் அறுபத்து நான்கனையும் கற்பது கல்வி கற்றோர் அனைவருக்கும் பல சிறப்புகளையே தரும் என்பது சான்றோர் கருத்து.

**கருத்து 1**
மாணவர்கள் தங்களின் ஓய்வு நேரம் பள்ளி விடுமுறை - கலைகள் பல - தற்காப்புக் கலைகள் - சிலம்பம், சீலாட், கராத்தே - தங்களைப் பாதுகாத்துக் கொள்ள - சிறந்த உடற்பயிற்சி

**கருத்து 2**
இசையாலே புவியை ஆளலாம் - பாடல், நடனம், இசைக் கருவிகள் இசைத்தல் - மனத்திற்கு இன்பம் - கவலையை மறக்க - திறமைகளை வெளிப்படுத்தும் தளம்

**கருத்து 3**
கோலம் இடுதல், ஓவியம் தீட்டுதல், சமையல் கலை, தோட்டம் போடுதல், தையல் கலை, பின்னல் -சிறந்த கலைகள் - தன்னம்பிக்கை - எதிர்காலத்திற்கு - தொழில் - வருமானம்

**முடிவுரை**
சிறந்த பொழுதுபோக்கு நடவடிக்கைகள் - நேர ஒதுக்கீட்டை அறிதல் - பாரம்பரியக் கலைகளை வாழ வைத்தல்

### நடவடிக்கை 1

**கொடுக்கப்பட்ட குறிப்புகளை வாசித்து 100 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை ஒன்றனை எழுதுக.**

3.6.12 - 100 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு:
- கருத்துகளை வாசித்து அறிதல்.
- கருத்து விளக்கக் கட்டுரை எழுதப் பணித்தல்.

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை உ.சி.தி: உருவாக்குதல் 21ஆம் நூ. தி: தகவல் நிறைந்தவர்

## திருக்குறளையும் பொருளையும் அறிக.



**மு.வரதராசனார்**

சிறப்பாகக் கல்வி கற்றவர். எண்ணற்ற கதைகள், கவிதைகள், நாவல்கள் எழுதியவர். இலக்கியப் பேரறிஞர் எனும் பட்டம் பெற்றது இவரின் கல்வியறிவுக்குச் சான்று.

**பாரதிதாசன்**

தமிழ் இலக்கண, இலக்கியங்களைக் கசடறக் கற்றவர். தமிழுக்கு அமுதென்று பேர் என்ற பாடலையெழுதித் தமிழ் கூறும் நல்லுலகில் அழியாப் புகழ் பெற்றவர்.

**கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை**

கல்வியில் சிறந்தவர். கவி புனையும் ஆற்றல் மிக்கவர். ஆங்கில இலக்கிய நூல்களை ஆழமாகக் கற்றுத் தமது மொழிப் புலமையை விரிவாக்கிக் கொண்டவர். ஆழ்ந்த கருத்துகள் நிறைந்த பல பாடல்களை எழுதியவர்.

**மறைமலை அடிகளார்**

தமிழ்மொழி மீது பற்றுள்ளவர். இலக்கியப் பாடல்களுக்கு விளக்கவுரை எழுதியது இவரின் தனிச்சிறப்பு.

அடேயப்பா! எத்துணைச் சிறப்பு! கற்றவர் என்றும் கற்றவர்தான். இதனால்தான் கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்று கூறினார்கள் போலும். கல்வி கற்றவர்கள் என்றென்றும் போற்றப்படுபவர்கள்தான். கல்வியின் மகத்துவத்தை இப்பொழுது உணர்கிறேன். கல்விச் செல்வம் நம்மை வாழ்வில் மேலோங்கச் செய்யும். மேலும், எண்ணும் இலக்கை அடைய கல்வியே சிறந்த வழிகாட்டி.

அற்புதமான கல்விச் செல்வத்தைப் பெறாவிடில் இப்பிறப்பு மட்டுமல்ல, எப்பிறப்பிலும் வேதனைதான். இதைத்தான் திருவள்ளுவர்

**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப் புடைத்து. (398)**

எனக் கூறியுள்ளார்.

இத்துணைச் சிறப்புமிக்க கல்வியை நாம் அனைவரும் கற்க வேண்டும். கற்றவர் இயம்பியது போல் வாழ்நாள் முழுவதும் கற்பதை மறக்கலாகாது. இப்பிறவியில் பெறும் கல்வியானது நமது வழிகாட்டி மட்டுமல்லாது நமக்குத் தொடர்ந்து வரக்கூடிய ஏழு பிறவிகளுக்கும் பாதுகாப்பாக அமையும் எனும் உண்மையை அறிய வேண்டும்.

வாருங்கள் தோழர்களே! கல்வியைக் கற்போம்! நலம் பெறுவோம்! வாழ்வில் வெற்றி கொள்வோம்!

## திருக்குறளும் பொருளும்

- **ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து. (398)**

- ஒரு பிறப்பில் ஒருவர் கற்றுக்கொள்ளும் நல்லறிவு அவருக்குத் தொடர்ந்து வரக்கூடிய ஏழு பிறவிகளுக்கும் பாதுகாப்பாக இருக்கும்.

## நடவடிக்கை 1

**திருக்குறளையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறுக; எழுதுக.**

## நடவடிக்கை 2

**கல்வி பற்றி நீ அறிந்த திருக்குறள்களைப் பட்டியலிட்டுப் பொருள் எழுதுக; குழுவில் வாசித்திடுக.**

1. ______________________

2. ______________________

3. ______________________



4.3.5 - ஐந்தாம் ஆண்டுக்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு:
- வாசிப்புப் பகுதியை வாசித்துப் பொருள் அறியப் பணித்தல்.
- திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து மனனம் செய்து கூறச் செய்தல்.

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை    உ.சி.தி: உருவாக்குதல்    21ஆம் நூ. தி: தகவல் நிறைந்தவர்


## பாடம் 5 இலக்கணம்

### வலிமிகும் இடங்கள் அறிக.

வன்தொடர்க் குற்றியலுகரத்துக்குப்பின் வலிமிகும். (த்து, ப்பு, ற்று)

எடுத்துக்காட்டு:

பத்து + காசு = பத்துக் காசு
தப்பு + கணக்கு = தப்புக் கணக்கு
விற்று + தந்தான் = விற்றுத் தந்தான்




### நடவடிக்கை 1

**உரையாடலை வாசித்து வலிமிகும் சொற்களை அறிந்து கூறுக.**

### நடவடிக்கை 2

**சொற்களைச் சேர்த்து எழுதுக.**

1. உப்பு + கிண்ணம் =
2. கற்று + கொடுத்தார் =
3. பிடித்து + தந்தனர் =
4. துடுப்பு + செய்தான் =
5. ஏற்று + கொண்டனர் =
6. கடித்து + தின்றன =
7. சேற்று + புண் =
8. தப்பு + செய்தான் =
9. குத்து + சண்டை =
10. மடித்து + தந்தாள் =
11. காற்று + சுழற்சி =
12. ஊற்று + தண்ணீர் =

## நடவடிக்கை 3

**கோடிட்ட இடங்களில் சரியான வலிமிகும் சொற்களை எழுதுக.**

த்து ப்பு ற்று

1. துளசி தன் அண்ணனின் திருமணத்தை முன்னிட்டு ஆசிரியரிடம் இரண்டு நாள்கள் ______ கேட்டாள்.
2. அத்தை ______ பானையைக் கழுவிச் சுத்தம் செய்தாள்.
3. அப்பா வெட்டித் தந்த கரும்பைத் தம்பி ______ தின்றான்.
4. சட்டத்தை மீறிய இளைஞர்கள் இருவர் ______ காவலில் வைக்கப்பட்டனர்.
5. ______ திறனாளியான அப்பெரியவர் சிறிய அளவில் வியாபாரம் செய்கிறார்.
6. அம்மா வேக வைத்த பருப்பை ______ கட்டையால் கடைந்தாள்.
7. ______ தாளில் தங்கை முயலின் படத்தை வரைந்தாள்.

## நடவடிக்கை 4

**வாக்கியங்கள் அமைத்திடுக.**

1. ஏற்றுக்கொண்டாள் :- ______
2. பித்துப் பிடித்தது :- ______
3. வைப்புத் தொகை :- ______
4. மாற்றுப்பாதை :- ______
5. காத்துக் கிடந்தேன் :- ______

5.8.5 - க்கு, ச்சு, ட்டு, த்து, ப்பு, ற்று என முடிவுறும் வன்தொடர்க் குற்றியலுகரத்துக்குப்பின் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.



ஆசிரியர் குறிப்பு:


- வலிமிகும் இடங்களை அறிந்து கொள்ளச் செய்தல்.
- பயிற்சிகளைச் செய்து சொற்களைப் பிழையற வாசித்துக் காட்டப் பணித்தல்.

வி.வ.கூ: மொழி உ.சி.தி: பயன்படுத்துதல் 21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்


தொகுதி 20

# கதையும் கவிதையும்


## பாடம் 1 கதை சொல்லப் போகிறேன்



இளவரசன் - பசுவின் கன்று - தேர் மோதி - இறத்தல்




தாய்ப்பசு - கண்ணீர் - ஆராய்ச்சி மணி - காவலன் - மன்னனிடம் -




தாய்ப்பசுவின் - இறந்த கன்று - இடத்திற்கு - மன்னன் - கண் கலங்கி



மன்னன் - விசாரித்தல் - இளவரசன் - ஒப்புக்கொண்டான்- பசுவுக்கு நீதி



இளவரசனை - அதே - இடத்தில் - தேர்க்காலில் - கட்டளை -



யாரும் - மன்னனே - தேரைச் செலுத்த - இளவரசன் - அருகில் - தேர் - நின்று போகுதல் -

### நடவடிக்கை 1

**படங்களைப் பார்த்துக் கதைகளைக் கூறுக; கதையின் மூலம் கூறப்படும் நீதியைக் கூறிக் கலந்துரையாடுக.**

1.8.5 - நீதிக் கதையைக் கூறுவர்.

ஆசிரியர் குறிப்பு:

- படங்களைப் பார்த்துக் குழுவில் உரையாடக் கூறுதல்.
- குழு முறையில் வகுப்பில் நீதிக் கதைகளைக் கூறி மகிழச் செய்தல்.

வி.வ.கூ: ஆக்கமும் புத்தாக்கமும் உ.சி.தி: ஆக்கச் சிந்தனை 21ஆம் நூ. தி: தகவல் நிறைந்தவர்

## பாடம் 2 நரியின் தந்திரம்

### கவிதையைத் தக்க தொனியுடன் வாசித்திடுக.



கோடுறு சினையிற் காகம்
　　கூடுவைத் தனேக காலம்
பேடொடு கூடி வாழும்
　　பெருமரப் பொந்தில் வந்தே
ஆடிய கரும்பாம் பொன்றங்
　　கதுபெறும் முட்டை யெல்லாம்
நாடியே குடித்துப் போட
　　நலிந் துளம் மெலிந்து வாடி

தன்னுயிர்ப் பாங்க னான
　　சம்புகன் அருகு போயிங்
கென்னசெய் குவனா னென்ன
　　இதைக்கொலல் அரிதோ நீபோய்
மன்னவன் தேவி ஆடும்
　　மஞ்சனச் சாலை புக்குப்
பொன்னணி கொண்டு வந்து
　　போடுக பொந்தில் என்ன

- பஞ்சதந்திரப் பாடல்

### நடவடிக்கை 1

**கவிதையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு, நயம் ஆகியவற்றுடன் வாசித்துக் காட்டுக.**

2.3.14 - கவிதையைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு, நயம் ஆகியவற்றுடன் வாசிப்பர்.

ஆசிரியர் குறிப்பு:
- கவிதை வரிகளைப் பிழையற வாசிக்கச் செய்தல்.
- சரியான வேகம், தொனி, உச்சரிப்பு, நயம் ஆகியவற்றுடன் கவிதையை வாசிக்கப் பணித்தல்.

வி.வ.கூ: சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் | உ.சி.தி: சிந்தனை வியூகம் | 21ஆம் நூ. தி: சிந்தனையாளர்

## நடவடிக்கை 2

**கவிதையின் முதற்கண்ணியின் பொருளை வாசித்திடுக. இரண்டாம் கண்ணியின் பொருளைச் சுயமாகக் கூறுக.**

1. ஒரு காகம் தன் பெண் காகத்துடன் ஒரு மரக்கிளையில் கூடு கட்டிக் கொண்டு நெடுங்காலமாக வாழ்ந்து வந்தது. அம்மரப் பொந்தில் இருந்த ஒரு கரும்பாம்பு, அக்காகம் இடும் முட்டைகளை எல்லாம் குடித்து வந்தது. இதைக் கண்ட காகம் மனம் கலங்கியது; வருந்தியது.

2. ஒரு நாள் காகம் தன் நண்பனான சம்புகன் எனும் நரியிடம் சென்று
........................

## நடவடிக்கை 3

**இக்கவிதைக் கதையின் முடிவினை ஊகித்துக் கூறுக.**


## நடவடிக்கை 4

**வாசித்து மகிழ்க.**

குழிவிழு விழியும் பழுதிலா மொழியும்
தொழுதிட விழையும் தோற்றமும் உடைய
கொழு கொழு கிழவி வழுவழு கிழங்கில்
கொழு கொழு என்றே குழம்பு வைத்தாள்!


மெழுகினை ஒத்த வழுதுணங் காயைக்
கழுவினள் கருத்தாய்; கூட்டினை வைத்தாள்!
ஆழாக்கு ஏழு கேழ்வர கெடுத்துக்
கூழாக்கி வைத்தாள்; குழைந்து அழைத்தாள்!

- முனைவர் அ. கோவிந்தராஜூ



# பாடம் 3 நட்பின் பலம்

## படத்தைப் பார்த்துக் கலந்துரையாடுக.




### நடவடிக்கை 1

**தனிப்படத்தைக் கொண்டு 100 சொற்களில் கதை ஒன்றனை எழுதுக.**

### நடவடிக்கை 2

**எழுதிய கதையை வகுப்பில் வாசித்துக் காட்டுக.**

3.6.16 - 100 சொற்களில் தனிப்படத்தைக் கொண்டு கதை எழுதுவர்.


ஆசிரியர் குறிப்பு:


- தனிப்படத்தின் சூழலைப் பார்த்து உரையாடப் பணித்தல்.
- தனிப்படத்தைக் கொண்டு கதை ஒன்றனை எழுதி வாசிக்கப் பணித்தல்.

வி.வ.கூ: ஆக்கமும் புத்தாக்கமும் | உ.சி.தி: பகுத்தாய்தல் | 21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்

## பழமொழிகளையும் பொருளையும் அறிக.

நல்லன்பன் மிகவும் திறமைசாலி. சிறந்த உழைப்பாளியும் ஆவார். அவரிடம் ஒரு மந்திர சக்தி இருந்தது.






## பழமொழியும் பொருளும்


- **நிழலின் அருமை வெயிலில் தெரியும்.**
  - ஒரு பொருளின் அல்லது ஒருவரின் அருமை, அதுவோ அவரோ இல்லாத போதுதான் வெளிப்படும்.
- **இமைக் குற்றம் கண்ணுக்குத் தெரியாது.**
  - நமக்கு வேண்டியவர்கள், நண்பர்கள் செய்யும் குற்றங்கள் நமக்குக் குற்றமாகத் தெரியாது.
- **நிறைகுடம் தளும்பாது.**
  - நிரம்பக் கற்றவர்கள் அதனை வெளிப்படுத்தாமல் அமைதியாகவும் ஆரவாரமின்றியும் நடந்துகொள்வர்.
- **வருந்தினால் வாராதது இல்லை.**
  - அக்கறையெடுத்துக் கொண்டால் நாம் அடைய முடியாதது ஒன்றுமே இல்லை.

## நடவடிக்கை 1

**பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து மனனம் செய்து கூறுக; எழுதுக.**

## நடவடிக்கை 2

**வாக்கியத்திற்கு ஏற்பப் பழமொழியை இணைத்துக் கூறுக.**



1. அண்ணன் சிறப்பாகக் கல்வி கற்றவர். ஆனாலும், எப்பொழுதும் அமைதியாகவே இருப்பார்.

2. அம்மாவின் தியாகங்கள் அனைத்தையும் அவர் இறந்த பிறகே உணர முடிகிறது.

3. புதிதாகப் பள்ளிக்கு மாற்றலாகி வந்த மாணவர்களைத் தன் நண்பன் கிண்டல் செய்ததை அமலன் கண்டும் காணாமல் சென்றான்.

4. முயற்சியுடன் சிரமம் பாராது கற்றால் நிச்சயம் வெற்றி பெறலாம்.

5. கடின உழைப்பும் விடா முயற்சியும் கொண்டு செயல்படுபவர்கள் வாழ்வில் உயர்ந்த நிலையை அடைவது நிச்சயம்.

6. தமிழ்மொழியில் மிகுந்த புலமை பெற்றிருந்த அப்பெரியவர் அமைதியுடனும் ஆரவாரமின்றியும் நடந்துகொள்வது அனைவரையும் கவர்ந்தது.

## நடவடிக்கை 3

**கொடுக்கப்பட்ட பழமொழிகளுக்குப் பொருத்தமான வாக்கியங்களை அமைத்து வாசித்திடுக.**

4.7.5 - ஐந்தாம் ஆண்டுக்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு:

- உரையாடல் கதையை வாசித்து அறியச் செய்தல்.
- பழமொழிகளையும் பொருளையும் அறிந்து மனனம் செய்து கூறப் பணித்தல்.

வி.வ.கூ: நன்னெறிப் பண்பு | உ.சி.தி: ஆய்வுச் சிந்தனை | 21ஆம் நூ. தி: சிந்தனையாளர்

## பாடம் 5 இலக்கணம்

### இடைச்சொற்கள் அறிக.

இருப்பினும்/ இருந்தாலும்

எடுத்துக்காட்டு:

1. அருந்ததி மிகவும் திறமைசாலி. **இருப்பினும்**, அவள் இலைமறை காயாக இருக்கவே விரும்புவாள்.
2. சீராளன் அனைவரிடமும் அன்பாகப் பழகுவான். **இருந்தாலும்**, நண்பர்கள் சிலர் அவனிடம் நெருங்கிப் பழக மாட்டார்கள்.

### நடவடிக்கை 1

**பொருத்தமான இடைச்சொற்களை எழுதுக.**

1. தங்கைக்கு நிறைய தோழிகள் உள்ளனர். __________, அனைவரிடமும் நெருங்கிப் பழக மாட்டாள்.
2. எங்கள் வகுப்பாசிரியர் அன்பானவர். __________, சில நேரங்களில் மாணவர்களிடம் கண்டிப்பாக நடந்து கொள்வார்.
3. கமலம் கெட்டிக்கார மாணவி __________, தன் நண்பர்களுடன் கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளத் தயக்கம் கொள்வாள்.

### நடவடிக்கை 2

**பொருத்தமான இடைச்சொற்களை எழுதுக.**

1. இருப்பினும் : ____________________
2. இருந்தாலும்: ____________________

5.3.22 - ஆயினும், இருப்பினும், ஆனாலும், இருந்தாலும் ஆகிய இடைச்சொற்களை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு:

- இடைச்சொற்களின் பயன்பாட்டினை அறியச் செய்தல்.
- உரையாடலில் உள்ள வாக்கியங்களை எழுதி இடைச்சொற்களை அடையாளமிடப் பணித்தல்.

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை உ.சி.தி: பயன்படுத்துதல் 21ஆம் நூ. தி: கொள்கையுள்ளவர்



# தொகுதி 21 மனமகிழ் நடவடிக்கைகள்



## பாடம் 1 இன்பம் பெறுவோம்



### செவிமடுத்து உரையாடுக.

செவிமடுத்திடுக



மதிப்பிற்குரிய வகுப்பாசிரியர் அவர்களே, என் சக மாணவர்களே, உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம். இன்று மனமகிழ் நடவடிக்கைகள் எனும் தலைப்பில் உங்கள் முன் பேச வந்துள்ளேன்.

அன்பான தோழர்களே,
மனமகிழ் நடவடிக்கைகளைப் பல வகைப்படுத்தலாம். சுற்றுலா செல்லுதல், விளையாட்டு, இசைக்கருவி இசைத்தல், நடனம் பழகுதல் என்று பலவற்றைக் கூறலாம்.

இனிய நண்பர்களே,
மனமகிழ் நடவடிக்கைகளால் பல நன்மைகள் உள்ளன. முதலில் இத்தகைய நடவடிக்கைகள் யாவும் நம் மனத்தை மகிழ்ச்சியாக வைத்துக்கொள்ள துணைபுரிகின்றன. இந்நடவடிக்கைகள் யாவும் நமக்குப் பகுதி நேரத் தொழிலாகவும் அமையலாம். தோட்டம் போடுவது, சமையல் செய்வது போன்ற நடவடிக்கைகளால் வருமானம் தேடவும் இயலும்.

தோழர்களே,
மனமகிழ் நடவடிக்கைகளால் நம் உடலை மட்டுமன்றி உள்ளத்தையும் ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளலாம். நாம் கற்றறிந்த இக்கலைகளைப் பிறருக்கும் போதிக்கலாம். இதனால், நம் பாரம்பரிய கலைகள் வளரவும் உதவலாம்.

வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி.



### நடவடிக்கை 1

**செவிமடுத்த உரையிலுள்ள முக்கியக் கருத்துகளைக் கூறி உரையாடுக.**




1.4.6 - செவிமடுத்த உரையிலுள்ள முக்கியக் கருத்துகளைக் கூறுவர்.

ஆசிரியர் குறிப்பு:
- கருத்துகளை வாசித்து அறியச் செய்தல்.
- முக்கியக் கருத்துகளைக் கூறிக் குழு முறையில் உரையாடப் பணித்தல்.

வி.வ.கூ: ஆக்கமும் புத்தாக்கமும் உ.சி.தி: பகுத்தாய்தல் 21ஆம் நூ. தி: தகவல் நிறைந்தவர்

## பாடம் 2 வாசிப்போம், வளம் பெறுவோம்

### வாசித்து அறிக.




வாசிப்பு என்பது ஒவ்வொரு மனிதனையும் முழுமையாகச் செய்யும் சிறந்த நடவடிக்கையாகும். நூல் பல கல், நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு போன்ற முதுமொழிகள் வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன.

வாசிக்கும் பழக்கத்தைச் சிறு வயது முதலே மேற்கொள்வது மிகச் சிறந்த செயலாகும். இந்நவீன உலகில் வாசிப்பு நடவடிக்கையை மேற்கொள்ள பல வழிகள் உள்ளன. புத்தகம், இணையம், மடிக்கணினி, திறன்பேசி போன்ற கருவிகள் மூலம் வாசிப்பு நடவடிக்கையில் ஈடுபடலாம்.

அச்சடித்து வெளிவரும் நூல்களை வாசிப்பதன் மூலம் நமது சிந்தனை ஆற்றல், கற்பனைத் திறன், மொழியாற்றல், எழுத்துத் திறன் ஆகியவற்றில் வல்லமை பெறலாம். மொழியியலில் திறம்பெற, வாசிப்பு அரியதொரு உத்தியாகவே கருதப்படுகின்றது. ‘சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்’ என்பதுபோல வாசிப்பு என்பது சிறந்த நாப்பயிற்சியாகும். சிறியோர் முதல் பெரியோர் வரை வாசிக்கும் நடவடிக்கையைப் புத்தகத்தின்வழி மேற்கொள்ளலாம்.

புத்தகங்களை அதிகம் நாடிய மக்கள் இன்று கணினி, மடிக்கணினி, திறன்பேசி போன்ற இணைய இணைப்புக் கருவிகளைப் பயன்படுத்த முற்பட்டுள்ளனர். இத்தகைய கருவிகள் மக்களைத் தம் வசப்படுத்தி ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளும் தன்மை கொண்டவையாக உள்ளன.



இத்தகைய இணையப் பயன்பாட்டுக் கருவிகள், புத்தக வாசிப்பிற்கு ஈடுபாடு கொள்ளாத நிலையை ஏற்படுத்தியுள்ளன. மேலும், இவற்றின் பயன்பாடு வாசிப்புத் திறனையும் ஆற்றலையும் குறைக்கவே செய்கின்றன.

**அருஞ்சொற்கள்**

- நுண்ணறிவு
- வல்லமை
- அரியதொரு
- வசப்படுத்தி
- பதிவேற்றப்


தங்களின் தேவைக்கு ஏற்பப் புத்தகங்களில் கிடைக்கும் தகவல்கள் இணையக் கருவிகளில் கிடைப்பதில்லை. பல இணையத் தளங்களில் கட்டுப்படுத்தப்பட்ட அளவே விவரங்களை வாசித்துப் பெற இயலும். பல வலைத் தளங்களில் பதிவேற்றம் செய்யப்படும் தகவல்களும் மிகக் குறைவாகவும் நமது தேவையைப் பூர்த்தி செய்யாமலும் இருக்கின்றன. எனவே, நாம் அனைவரும் நம் மனத்திலுள்ள கிழிசல்களைத் தைத்துச் சீராக்க வல்ல நூல்களை நாடிக் கற்பதே சிறப்பாகும். நூல்களை நேசிப்போம்! வாசிப்போம்!

## நடவடிக்கை 1

**வாசிப்புப் பகுதியை வாசித்துத் தகவல்களை அடையாளம் கண்டு ஒப்பிட்டு உரையாடுக.**

## நடவடிக்கை 2

**ஒப்பிட்ட தகவல்களை வரிப்படத்தில் எழுதி வாசித்திடுக.**



2.4.12 - வாசிப்புப் பகுதியிலுள்ள தகவல்களை அடையாளம் கண்டு ஒப்பிடுவர்.

ஆசிரியர் குறிப்பு:

- வாசிப்புப் பகுதியை வாசித்து அறியச் செய்தல்.
- தகவல்களைப் பட்டியலிட்டு வாசிக்கப் பணித்தல்.

வி.வ.கூ: தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் உ.சி.தி: பகுத்தாய்தல் 21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்

# பாடம் 3 தற்காப்புக் கலைகள்

## வாசித்து அறிக.

01
- சிறந்த உடற்பயிற்சி
- வியர்வை
- உடல் சமன்நிலை
- ஆரோக்கியம்
- சீரான உடல் எடை
- நோயற்ற வாழ்வு

02
- உடல் நெகிழ்வுத் தன்மை
- எலும்புகள் வலுவாகும்
- உடல் நலம் பெறும்
- தசைகளின் பயன்பாடு அதிக வலுவாகும்
- உடல், உள்ளம் பலம் பெறும்.

03
- மன அமைதி
- வாழ்வில் மகிழ்ச்சி
- நேர்மறையான சிந்தனை
- சக நண்பர்களிடம் அன்பு
- குடும்ப உறவுகளின் பலம்
- ஒற்றுமை உறவுகளின் நேசம்

04
- கூர்ந்த கவனிப்பை அதிகரிக்கும்
- கட்டொழுங்கை உருவாக்கும்
- கல்வி கேள்விகளில் சிறப்பு
- வேலைகளில் முழுமை
- மேன்மை



## நடவடிக்கை 1

**கருத்துகளைத் தொகுத்துப் பத்தியில் எழுதுக.**


3.5.6 - கருத்துகளைத் தொகுத்துப் பத்தியில் எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு:
- கருத்துகளைத் தொகுத்துப் பத்தியில் எழுதப் பணித்தல்.
- கருத்துகளைத் தொகுத்துப் பத்தியில் எழுதி வாசித்துக் காட்டச் செய்தல்.

வி.வ.கூ: ஆக்கமும் புத்தாக்கமும் உ.சி.தி: உருவாக்குதல் 21ஆம் நூ. தி: தகவல் நிறைந்தவர்

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## திருக்குறளையும் பொருளையும் அறிக.





நவநீதம்: முற்றிலும் உண்மை மேகலை. இம்முறை எனது விடுமுறையைப் பயனான வழியில் கழித்தேன். உன் பெற்றோரையும் உன் தம்பி தங்கையையும் எனக்கு மிகவும் பிடித்துவிட்டது. அவர்கள் மிகவும் அன்பானவர்கள். நான் இங்கு வந்த முதல் நாளே என்னை இன்முகத்துடன் வரவேற்று உபசரித்தது இன்னும் என் மனத்தில் நிழலாடுகிறது. மேலும், எனக்குப் பிடித்தமான முறையில் உன் அம்மா பலவகை உணவுகளைச் சமைத்து என்னை உண்ணச் செய்தது எல்லாம் என்றும் மறக்க முடியாதவை ஆயிற்றே! இத்துணை அன்பான உபசரிப்பைப் பார்க்கும்போது நான் படித்த திருக்குறள்,

**மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து. (௯0)**

எனும் வரிகள் என் நினைவுக்கு வருகிறது. உன்னையும் உன் பெற்றோரையும் என்றும் நான் மறவேன் மேகலை.

மேகலை: உனது மேன்மையான எண்ணத்திற்கு மிக்க நன்றி நவநீதம். வீட்டிற்கு வரும் விருந்தினர்களை முகம் மலர வரவேற்று உபசரிப்பது நம் அனைவரின் கடமைகளில் ஒன்றாகும். நீயும் எங்கள் குடும்பத்தில் ஒருத்தியாய் மிகவும் கலகலப்பாகப் பழகினாய். உனது அன்பும் கனிவான பேச்சும் எங்கள் அனைவரையும் கவர்ந்தது. ஆனால், நாளை நீ உன் இல்லம் திரும்பப் போகிறாய். உன்னை அனுப்பி வைக்க எங்களுக்கு மனமேயில்லை.




## திருக்குறளும் பொருளும்

**மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து. (௯0)**

- அனிச்சப்பூ மோந்தவுடன் வாடிவிடும். அதுபோல முகம் மலராமல் வேறுபட்டு நோக்கியவுடன் விருந்தினர் வாடி நிற்பர்.

### நடவடிக்கை 1

**திருக்குறளையும் அதன் பொருளையும் மனனம் செய்து கூறுக.**

### நடவடிக்கை 2

**திருக்குறளுக்கேற்பச் சூழலை உருவாக்கி நடித்திடுக.**

4.3.5 - ஐந்தாம் ஆண்டுக்கான திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து கூறுவர்; எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு:
- உரையாடலைப் பாகமேற்று வாசிக்கச் செய்தல்.
- திருக்குறளையும் அதன் பொருளையும் அறிந்து எழுதக் கூறுதல்.

வி.வ.கூ: நன்னெறிப் பண்பு உ.சி.தி: சீர்தூக்கிப் பார்த்தல் 21ஆம் நூ. தி: அன்பானவர்/ பரிவுள்ளவர்

# பாடம் 5 இலக்கணம்

## இடைச்சொற்கள் அறிக.

அதற்காக — இன்னும் — மேலும்

**எடுத்துக்காட்டு:**

1. அலுவலகத்தில் நீண்ட காலமாக அப்பா பணிபுரிந்தார். **அதற்காக**, அவருக்கு உயர் அதிகாரி எனும் பதவி உயர்வு கிடைத்தது.
2. அண்ணன் உணவுக் கடையொன்றைத் திறமையாக நடத்தி வருகின்றார். **இன்னும்,** சில கடைகளை வாங்கும் முயற்சியில் கவனம் செலுத்துகின்றார்.
3. பரிசளிப்பு நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக நடைபெற்றது. **மேலும்**, பாரம்பரிய நடனங்கள் அந்நிகழ்ச்சிக்கு அழகு சேர்த்தன.

## நடவடிக்கை 1

**இடைச்சொற்களைக் கொண்டு வாக்கியம் அமைத்திடுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அதற்காக | - | __________ | என்றாலும் | - | __________ |
| இன்னும் | - | __________ | எனினும் | - | __________ |
| மேலும் | - | __________ | அல்லது | - | __________ |

## நடவடிக்கை 2

**இடைச்சொற்களைக் கொண்டு வாக்கியங்களை நிறைவு செய்க.**

1. சுயமாக மகிழுந்து ஒன்றை வாங்க மலர்விழி எண்ணம் கொண்டாள். __________, தனது வருமானத்தில் ஒரு பகுதியைச் சேமித்து வைத்தாள்.

2. அமலன் கவிதைகள் இயற்றினான். __________, சிறந்த கவிதைகளை இயற்றவும் முயற்சி செய்கிறான்.

3. பள்ளியின் பசுமைத் திட்டப் பணியில் பெற்றோர்களும் கலந்து சிறப்பித்தனர். __________, முன்னாள் மாணவர்கள் பலரும் தங்களின் ஒத்துழைப்பை நல்கினர்.

## நடவடிக்கை 3

**பத்திகளில் பொருத்தமான இடைச்சொற்களை எழுதுக.**

அக்காள் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பில் உயர்ந்த புள்ளிகளைப் பெற்றாள். __________ அவளுக்குச் சிறந்த பட்டதாரி எனும் விருது வழங்கப்பட்டது. பட்டமளிப்பு விழாவுக்கு உறவினர்களும் நண்பர்களும் வந்திருந்தனர். __________ அக்காவின் ஆரம்பப் பள்ளித் தோழர்கள் சிலரின் வருகை மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. அக்காள் படிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவள். __________ முதுகலைக் கல்வி பயில வேண்டும் என்பது அவளின் அவா.

அரிசி, கோதுமைக்கு அடுத்ததாக மக்கள் அதிகம் விரும்பி உண்பது உருளைக்கிழங்கைத்தான். __________ இக்கிழங்கினை உலகின் மிக முக்கிய வியாபாரக் காய்கறி என்றும் கூறலாம். __________ இந்தக் கிழங்கு இயற்கையிலேயே ஊட்டச்சத்துள்ள உணவாகக் கருதப்படுகின்றது. __________ சொல்லப்போனால் எளிதில் சமைக்கக்கூடிய உணவாகவும் இது திகழ்கின்றது. __________ இக்கிழங்கானது உடலில் அதிகமாக உள்ள புளித்த அமிலங்களைச் சமன்படுத்தி நமது உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கிறது.

குங்குமப்பூ என்பது உலகின் விலை உயர்ந்த வாசனைப் பொருளாகும். __________ இதன் வாசனைக்கு எதுவும் ஈடாகா. குங்குமப்பூவின் தாயகம் தெற்கு ஐரோப்பா. இச்செடி வளரும் வயல்கள் பார்க்க அழகாக இருக்கும். இச்செடியானது மணற்பாங்கான அல்லது சரளை மண் நிறைந்த நிலத்தில்தான் வளரும். செடிகள் பூக்க ஓராண்டு ஆகும். __________ இதை நாடுவோர் அதிகம். பூக்கள் வாசனை மிகுந்திருக்கும். பறித்த குங்குமப் பூவை மூன்றிலிருந்து ஐந்து நாள்கள் வரை உலர வைப்பர். பிறகு, குச்சியால் லேசாக அடித்துச் சலிப்பர். __________ பெரிய துவாரங்கள் உள்ள சல்லடைகளைப் பயன்படுத்துவர்.

5.3.2 I - என்றாலும், எனினும், அதற்காக, இன்னும், மேலும் ஆகிய இடைச்சொற்களை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.



ஆசிரியர் குறிப்பு:

- இடைச்சொற்களை வாசித்து அறிதல்.
- இடைச்சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை எழுதி வாசிக்கப் பணித்தல்; பத்திகளை இடைச்சொற்களைக் கொண்டு பூர்த்தி செய்யப் பணித்தல்.

வி.வ.கூ: சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் | உ.சி.தி: சிந்தனை வியூகம் | 21ஆம் நூ. தி: தகவல் நிறைந்தவர்

தொகுதி 22

# தமிழர் திருநாள்

## பாடம் 1 உழவர் திருநாள்

கலந்துரையாடுக.



சூரியப் பொங்கல்



காணும் பொங்கல்



மாட்டுப் பொங்கல்

### நடவடிக்கை 1

**தலைப்பிற்குப் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசிடுக.**

1.7.19 - தலைப்பிற்குப் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசுவர்.

ஆசிரியர் குறிப்பு:

- படங்களைப் பார்த்து உரையாடச் செய்தல்.
- பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசப் பணித்தல்.

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை | உ.சி.தி: பயன்படுத்துதல் | 21ஆம் நூ. தி: குழுவாகச் செயல்படுதல்

## பாடம் 2 நன்றி கூறும் விழா

### வாசித்து அறிக.



உலகத்திற்கே நம் தமிழர் பண்பாட்டை எடுத்துக்கூறும் முப்பெரும் பண்டிகை எனப் பொங்கல் பண்டிகையைக் கூறினால் அது மிகையாகாது.

பொங்கல் என்று சொன்னாலே நமது உள்ளமெல்லாம் இனிப்பதை உணர முடியும். குறிப்பாக, உழவர்களின் மனத்தைக் குளிர வைத்து உவகை அடையச் செய்வதே இத்திருநாள்தான்.

‘ஆடிப்பட்டம் தேடி விதை’ எனும் பழமொழிக்கேற்ப உழவர்கள் தங்களின் விருப்பத் தெய்வத்தையும் இயற்கையையும் வேண்டிக் கொண்டு நெல்லை விதைப்பார்கள். ஆறு மாதத்தில் நெற்கதிர்கள் கனம் தாங்காமல் நன்கு வளைந்து, மண்ணை நோக்கி இருக்கும். உழவர்கள் தங்களின் உழைப்பை எண்ணித் தலை நிமிர்ந்து நிற்பர்.

அயராத உழைப்பிற்குப் பயன் தரும் வகையில் ஒளி கொடுத்த சூரியனுக்கும் மழையைக் கொடுத்த மேகத்திற்கும் உழவர்கள் நன்றி கூறும் விழாவாக அமைவதுதான் பொங்கல் திருநாள். முற்றிய கதிர்களை அறுவடை செய்யும் பணியினை உழவர்கள் மனம் மகிழச் செய்து முடிப்பர். முதலில் அறுவடை செய்யும் நெற்கதிர்களைக் கொஞ்சம் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்வர். அறுவடை நெல்லை விற்றுக் கிடைக்கும் பணத்தில் முதல் வேலையாக வீட்டிற்குச் சுண்ணாம்பைக் கொண்டு வெள்ளை அடிப்பார்கள்.

தை பிறந்தால் வழி பிறக்கும். தை மாதமே உழவர்களை மகிழ்விக்கும் மாதம் என்பதால், அம்மாதத்தின் முதல் நாளே பொங்கல் பண்டிகையாகக் கொண்டாடப்படுகிறது. உழவர்கள் தங்களின் விவசாயப் பொருள்களுக்குச் சந்தனம், குங்குமம் இடுவர். சூரியன் உதயமாகும் வேளையில் வீட்டு வாசலில் கோலமிட்டு, மூன்று செங்கற்களை வைத்து அடுப்பை மூட்டுவர். அதன் மேல் புதிய பானை வைத்து நீரை ஊற்றி முதல் அரிசியைப் போட்டு, பனை வெல்லம், பால் என ஊற்றிப் பொங்கல் வைப்பர்.

பொங்கல் வைக்கும்போது நிலமாக மண்ணையும் நீராகப் பாலையும் காற்றாக உயிர்வளியையும் சூரியனாக நெருப்பையும் வானாகக் கூரையையும் ஒன்றிணைத்து ஐம்பூதங்களும் வாழ்த்துவதுபோல் பொங்க வைப்பது தனிச்சிறப்பாகும்.

**தகவல் கூடம்**

- பட்டம் என்பது கால நிலையின் குறியீட்டுச் சொல்லாகும்.

பொங்கல் பொங்கி வரும்போது உற்சாகத்துடன் 'பொங்கலோ! பொங்கல்!' என உரக்கக் கத்தியும் குலவையிட்டும் தங்களின் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவர்.

நம்மை நலத்துடன் வாழ வைக்கும் இயற்கையைப் போற்றி, நன்றி நவிலும் பண்டிகையாக இதனைக் கொண்டாடுவதில் அகம் மகிழ்வோம், பெருமிதம் கொள்வோம்.

**என்னை நுணுகு**

## நடவடிக்கை 1

**உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்கு விடையளித்திடுக.**

1. முப்பெரும் பண்டிகை எனப்படுவது யாது?
2. உழவர்கள் யாருக்கு நன்றி கூறுவர்?
3. 'ஐம்பூதங்களும் வாழ்த்த' எனும் கூற்றினை விளக்குக.
4. பொங்கல் பண்டிகையின் முதல் நாள் செய்யும் நடவடிக்கைகள் யாவை? காரணம் என்ன?
5. இப்பண்டிகையைப் போன்று கொண்டாடப்படும் வேறு சில பண்டிகைகளைக் கூறுக.

ஆடிப்பட்டம் தேடி விதை என்ற பழமொழியின் பொருளை விளக்குக.

பொங்கல் பண்டிகைக்கும் 'காவாய்' பண்டிகைக்கும் இடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் கூறிடுக.

2.6.8 - சமூகவியல் தொடர்பான உரைநடைப் பகுதியை வாசித்துக் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிப்பர்.

ஆசிரியர் குறிப்பு:

- உரைநடைப் பகுதியை வாசிக்கச் செய்தல்.
- கருத்துணர் கேள்விகளுக்குச் சரியான பதிலளித்துக் குழுவில் உரையாடப் பணித்தல்.

வி.வ.கூ: தொழில் முனைப்பு | உ.சி.தி: பகுத்தாய்தல் | 21ஆம் நூ. தி: தகவல் நிறைந்தவர்

## கடிதத்தை வாசித்து எழுதுக.

சி. முகில்வண்ணன்,
24, மகரந்தம் சாலை 1,
தாமான் மகரந்தம்,
32040 சித்தியவான்,
பேராக்.

15 ஆகஸ்டு 2021

அன்பு நண்பா,

உன் இனிய நண்பன் பூங்குயிலன் எழுதும் அன்பு மடல். இங்கு நாங்கள் அனைவரும் நலம். அங்கு உன் பெற்றோர், தம்பி, தங்கைகள் ஆகியோரின் நலமறிய ஆவல்.

சென்ற விடுமுறையில் உன் வீட்டில் தங்கி, கார்த்திகைத் திருநாளைக் கொண்டாடியதை எண்ணிப் பார்க்கிறேன். என் மனம் எல்லையற்ற பூரிப்படைகிறது. மிகவும் சிறப்பு வாய்ந்த அந்நாளில் தமிழர்கள் அனைவரும் தங்கள் வீடுகளில் விளக்கேற்றி அலங்காரம் செய்திருந்ததை இன்றும் என்னால் மறக்க இயலவில்லை.

அந்நாளில் முத்தாய்ப்பு வைத்ததுபோல் அமைந்தது உன் தந்தை நம்மிடம் தந்த விளக்கம்தான். கார்த்திகைத் திருநாளைப் பற்றிய விளக்கங்களை நம்மிடம் அவர் கூறியபோது நான் உள்ளபடியே அளவில்லா மகிழ்ச்சியடைந்தேன். கார்த்திகைத் திருநாள் என்பது கார்த்திகை மாத பௌர்ணமி நாளும் கார்த்திகை நட்சத்திரமும் சேர்ந்த நாளாகும். அந்நாளில் தமிழர்கள் ஒரு மாதத்தில் உள்ள நாள்களை 27 நாள்மீன் பெயர்களால் அழைத்தனர். அந்த நாள்மீன்களில் ஒன்றுதான் கார்த்திகை.

கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை நாள் மிகவும் சிறப்பு வாய்ந்தது. எனவேதான், அன்றைய நாளில் வீடுகளின் வெளிப்புறத்திலும் வாசலிலும்

விளக்கேற்றி ஒளிர்வடையச் செய்கின்றனர். கார்த்திகை மாதத்தின் மற்றொரு சிறப்பு என்னவென்றால் காந்தள் பூ மிகுதியாக மலரும் காலமாகும்.

நண்பா, இவ்வளவு தகவல்களையும் உன் தந்தை அன்று கூறியதை அப்படியே மனத்தில் பதிய வைத்துக் கொண்டேன். நம் தமிழர்களின் பண்டிகைகளிலும் விழாக்களிலும் எத்துணைச் சிறப்புகள் அடங்கியுள்ளன பார்த்தாயா?

அந்த மலரும் நினைவுகளுடன் விடைபெறுகிறேன்.
நன்றி.

உன் அன்புத் தோழன்,
பூங்குயிலன்

## நடவடிக்கை 1

**கடிதத்தில் கூறப்பட்ட விவரங்களைக் குழுவில் உரையாடுக.**

## நடவடிக்கை 2

**நண்பனின் அழைப்பை ஏற்று எதிர்வரும் விடுமுறைக்கு நண்பனின் இல்லம் சென்று பார்க்க வேண்டிய சில இடங்களைப் பற்றி ஒரு நட்புக் கடிதம் எழுதிடுக.**

- கால்நடைப் பண்ணை
- நெல் வயல்
- அருவி
- பழத்தோட்டம்
- காய்கறித் தோட்டம்
- மீன் பிடிக்கும் குளம்

## நடவடிக்கை 3

**லங்காவித் தீவில் வசிக்கும் உன் நண்பன், பள்ளி விடுமுறைக்கு அங்கு வரச் சொல்லி அழைத்துள்ளான். ஆனாலும், சில குறிப்பிட்ட காரணங்களால் நீ அங்குச் செல்ல முடியாத நிலையை விளக்கி ஒரு கடிதம் எழுதுக.**

3.6.18 - 100 சொற்களில் நட்புக் கடிதம் எழுதுவர்.

ஆசிரியர் குறிப்பு:
- நட்புக் கடிதத்தை வாசிக்கச் செய்தல்.
- சுயமாக நட்புக் கடிதம் ஒன்றனை எழுதி வகுப்பில் வாசித்துக் காட்டக் கூறுதல்.

வி.வ.கூ: நன்னெறிப் பண்பு | உ.சி.தி: ஆக்கச் சிந்தனை | 21ஆம் நூ. தி: கொள்கையுள்ளவர்

## பாடம் 4 செய்யுளும் மொழியணியும்


### உவமைத்தொடர்களையும் பொருளையும் அறிக.

**கதை 1**



சுந்தரவனம் எனும் சிற்றூர் இயற்கை அழகு மிகுந்த ஓர் ஊராகும். இங்கு வாழும் மக்கள் உழைப்பில் சிறந்து விளங்கினர். விவசாயமே அவர்களின் உயிர் என்பதால் நெல் பயிரிடுதல், காய்கறித்தோட்டம் போடுதல் ஆகிய தொழிலைச் செய்தனர். இவர்களின் கடின உழைப்பால் ஊரே பசுமையாகக் காட்சியளித்தது. திடீரென ஒரு நாள் மழையும் புயலும் அவ்வூரைத் தாக்கியது. நெல் வயல்கள் வெள்ளத்தில் மூழ்கின. கால்நடைகளைக் காப்பாற்ற முடியாமல் மக்கள் தவித்தனர். **அனலில் இட்ட மெழுகு போல** ஊர் மக்கள் சோகத்தில் துடித்தனர். தங்கள் ஊர் பசுமையை இழந்திடுமோ என்று அச்சத்தில் வாடினர்.

**கதை 2**




வழக்கம் போல அன்றும் உறங்கச் செல்லும்முன் தாத்தாவிடம் கதை கேட்க அமர்ந்தோம். ஆனால், அன்றைய தினம் அக்கா தனது வீட்டுப் பாடங்களைப் பற்றிய விளக்கங்களைத் தாத்தாவிடம் கேட்க ஆரம்பித்துவிட்டாள். ஆசிரியர் கொடுத்த திரட்டேடு தயாரிக்கும் வேலைகளைப் பற்றிய கேள்விகளைக் கேட்டு விவரங்களைச் சேகரித்தாள்.

அக்காவின் கேள்விகள் அனைத்திற்கும் தாத்தா தன்னம்பிக்கையுடன் பதில் கூறினார். தாத்தாவிற்கு நாளிதழ் வாசிப்பது பிடித்தமான ஒன்று. அன்றாடச் செய்திகளையும் தகவல் ஊடகங்களின் மூலம் அறிந்துகொள்வார். நாம் அனைவரும் வெளியுலகம் அறியாமல் **கிணற்றுத் தவளை போல** வாழக் கூடாது என்பார். நம்மைச் சுற்றிலும் வெளியிலும் நடக்கும் நடப்புச் செய்திகளை அறிவதில் ஈடுபாடு காட்ட வேண்டும் என்றார்.

## கதை 3

கல்வியிலும் இணைப்பாட நடவடிக்கைகளிலும் மிகவும் துடிப்புடன் செயல்படுபவன் நிறைமதியன். எல்லாப் பாடங்களிலும் சிறப்புத் தேர்ச்சி பெறுவது அவன் நற்பெயரை மேலோங்கச் செய்தது. மேலும், மும்மொழிகளிலும் சரளமாகப் பேசும் ஆற்றல் கொண்டவன். பள்ளியையும் மாநிலத்தையும் பிரதிநிதித்துப் பல போட்டிகளில் வாகை சூடுவது வழக்கமாகிப் போனது. **குன்றின் மேலிட்ட விளக்குப் போல** நிறைமதியனின் திறமையை அனைவரும் பாராட்டி மகிழ்ந்தனர்.




## உவமைத்தொடர்களும் பொருளும்

- **அனலில் இட்ட மெழுகு போல** - துன்பத்தால் மனம் கலங்குதல்
- **கிணற்றுத் தவளை போல** - வெளியுலகம் அறியாமை
- **குன்றின் மேலிட்ட விளக்குப் போல** - அனைவரும் அறியும்படி இருக்கும் ஒருவரின் திறமை

### நடவடிக்கை 1

**உவமைத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து கூறுக; எழுதுக.**

### நடவடிக்கை 2

**உவமைத்தொடர்களுக்கேற்ப வேறு கதைகளை உருவாக்கிக் கூறுக.**

### நடவடிக்கை 3

**உவமைத்தொடர்களுக்குப் பொருத்தமான வாக்கியங்களை எழுதி வாசித்துக் காட்டுக.**

4.11.3 - ஐந்தாம் ஆண்டுக்கான உவமைத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.


ஆசிரியர் குறிப்பு:

- கதையை வாசித்து அறிதல்.
- உவமைத்தொடர்களையும் அவற்றின் பொருளையும் வாக்கியம் அமைத்துக் கூறப் பணித்தல்.

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை    உ.சி.தி: பகுத்தாய்தல்    21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்

# பாடம் 5 இலக்கணம்

## செய்வினை, செயப்பாட்டுவினை அறிக.




### நடவடிக்கை 1

**உரையாடலில் உள்ள செயப்பாட்டுவினை வாக்கியங்களைக் கண்டறிந்து செய்வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.**

### நடவடிக்கை 2

**செய்வினை வாக்கியங்களைச் செயப்பாட்டுவினை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.**

1. அத்தை சுவையான உணவுகளைச் சமைத்தார்.
2. மாணவர்கள் தேசப் பற்றுடன் தேசிய கீதம் பாடினர்.
3. வியாபாரிகள் தரமான பொருள்களை விற்பர்.

5.3.24 - செய்வினை, செயப்பாட்டுவினை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

ஆசிரியர் குறிப்பு:
- செய்வினை, செயப்பாட்டுவினை வாக்கியங்களை அறிதல்.
- செயப்பாட்டு வினை, வாக்கியங்கள் எழுதி வாசிக்கக் கூறுதல்.

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை    உ.சி.தி: பயன்படுத்துதல்    21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்

தொகுதி 23

# கலையும் இசைக்கருவிகளும்

## பாடம் 1 பல்வகை நடனங்கள்

**கலந்துரையாடுக.**




**நடவடிக்கை 1**

**வரைபடத்தில் உள்ள தகவல்களை விவரித்துக் கூறுக.**

1.9.2 - வரைபடத்தில் உள்ள தகவல்களை விவரித்துக் கூறுவர்.

ஆசிரியர் குறிப்பு:

- வரைபடத்தில் உள்ள தகவல்களை அறிதல்.
- தகவல்களை விவரித்துக் குழுவில் உரையாடப் பணித்தல்.

வி.வ.கூ: உலகளாவிய நிலைத்தன்மை உ.சி.தி: பகுத்தாய்தல் 21ஆம் நூ. தி: அறியும் ஆர்வம்



## பாடம் 2 நடனமும் நளினமும்

### மேலோட்டமாக வாசித்திடுக.

தமிழர் இசைக் கருவிகளை இரு வகையாகப் பிரிக்கலாம். பண்கள் இசைக்கும் கருவிகளைப் பண்ணிசைக் கருவிகள் என்றும், தாளத்தைப் பொருத்தமாகக் குறித்துச் சுவையுடன் ஒலிக்கும் கருவிகளைத் தாளக் கருவிகள் என்றும் கூறுவர்.

இசைக்கருவிகள் மரம், மூங்கில், நரம்பு, கயிறு, தோல் என்பனவற்றால் பல உருவில் செய்யப்படுகின்றன. தமிழர் பண்பாட்டுக் கருவிகளில் 'யாழ்' என்பது முக்கியமானதாகும். யாழ் என்பது நரம்புகளால் கட்டப்பட்டது என்று பொருள்படும். தமிழர்கள் வாசித்த முதல் இசைக் கருவி இதுவே என்றும் கூறப்படுகின்றது. மேலும், யாழ் எனும் இசைக்கருவியே நரம்புக்கருவிகளின் வளர்ச்சிக்குக் காரணமாகக் கருதப்படுகின்றது.

மீட்டி வாசிக்கக்கூடிய நரம்புக் கருவி யாழ் ஆகும். இதன் இசையொலி பெருக்கி 'தணக்கு' எனும் மரத்தால் செய்யப்பட்டதாகும். படகு வடிவமாக இருக்கும் இக்கருவியின் மேற்பரப்பு, தோலால் மூடப்பட்டிருக்கும். இத்தோலுக்குப் போர்வைத் தோல் என்று பெயர். சில யாழ்களில் 'மாடகம்' அல்லது முறுக்காணிகள் இருக்கும். பேரியாழ், சீறியாழ், மகரயாழ், சகோடயாழ் என்று யாழினைப் பலவகைப்படுத்திக் கூறுகின்றனர். சங்க இலக்கியம், முற்கால காப்பியங்கள் ஆகியவற்றில் 'யாழ்' மட்டுமே இடம் பெற்றதாகவும் கூறப்படுகின்றது.

யாழினைப் போன்றே வீணையும் மிகத் தொன்மையான இசைக்கருவியாகும். இக்கருவியின் மூலம் இசையின் பல நுட்பங்களை வெளிப்படுத்தலாம். வீணை, மீட்டும் கருவியாகும். வீணையைப் பலா மரத்தினால் செய்வது வழக்கமாகும். குடம், மேற்பலகை, தண்டி, மாடச்சட்டம், சுரைக்காய், பிரடைகள், யாழிமுகம், மேளச்சட்டம், மெழுகுச்சட்டம், மெட்டுகள், குதிரைகள் ஆகியவை வீணையின் பாகங்களாகும்.

உருத்திரவீணை, சித்திரவீணை, சாத்வீகவீணை எனப் பலவகை வீணைகள் உள்ளன. வீணை செய்வதைத் தெய்வீகத் தொழிலாகவே கருதுகின்றனர். இக்கருவியைச் செய்வதற்குப் பொறுமை, நிதானம், தொழில் நுணுக்கம் மிக அவசியமாகும்.

ஒரே மரத்துண்டினால் வீணையின் பகுதிகளான குடம், தண்டியாளியின் தலை ஆகிய பாகங்களைச் செய்கின்றனர். இதற்கு ஏகாந்தவீணை என்று பெயராகும். தனித்தனியாகச் செய்து பொருத்தினால் ஒட்டுவீணை என்பர். இவ்வாறு தமிழ் இசைக் கருவிகளின் மாண்புகளைக் கற்றுத் தெளியலாம்.

